227
3-56



OF THE REGISTRAR OF
13 JUL 1956
MADRAS

உ

ஸ்ரீ ராமஜெயம்

# கம்பர்ராமாயணக் கருப்பொருள்

# ★ அம்மானை ★

ஆசிரியர்

செங்கப்படுத்தான்காடு.

## டி. கே. இராமலிங்கம் பிள்ளை

சிறப்புரை

அம்மனூர் ஸ்ரீலஸ்ரீ கு. க. சதாசிவ அடிகள்

தஞ்சை தாசில்தார்

திருவாளர் எஸ். இராமச்சந்திரப்பத்

பதிப்பித்தோர்
ட்டுகோட்டை
லியம் (மின்) அச்சகம்.

உ

ஸ்ரீ ராமஜெயம்

# கம்பர் இராமாயண கருப்பொருள்
# அம்மானை

ஆசிரியர்

செங்கப்படுத்தான்காடு

டி. கே. இராமலிங்கம் பிள்ளை

சிறப்புரை

அம்மளூர் ஸ்ரீலஸ்ரீ கு. க. சதாசிவ அடிகள்

தஞ்சை தாசில்தார்

திருவாளர் எஸ். இராமச்சந்திரப் பத்தர்

பதிப்பித்தோர்

பட்டுக்கோட்டை

அன்புநிலையம் (மின்) அச்சகம்.

87

ற் பதிப்பு :   துன்முகி-ஸூ சித்திரை-மீ 12உ

பதிப்புரிமை :   ஆசிரியருக்கே

ஸ்ரீராமஜெயம்

## ஸ்ரீ கம்ப நாட்டாழ்வார் திருவடிகளே சரணம்

# கம்பர் ராமாயணக் கருப்பொருள்

# அம்மானை.

ஆதி முதல் அந்தம் வரை சுருக்கமாகவும் கிட்கிந்தா காண்டம் வாலி வதைப் படலமும் சுந்தர காண்டம், உருக்காட்டுப் படலம், சூளாமணிப் படலம், திருவடி தொழுத படலம், உயித்தகாண்டம், அங்கதன்தூதுப்படலமும் இதிலடங்கியிருக்கிறது. பட்டுக்கோட்டைத் தாலுக்கா செங்கப்படுத்தாங்காடு ஸ்ரீலஸ்ரீ **ரு. ம. மெய்கண்ட தேசிகம் பிள்ளை** அவர்கள் மாணாக்கனும்,

ஷியூர் மு காத்த வேளாளர் குமாரனுமான **T. K. இராமலிங்கம் பிள்ளையால்** பாடப்பெற்று திருத்துறைப்பூண்டித் தாலுக்கா அம்மளூர் சங்கேந்தி திருவள்ளுவரில்லம் **கு. க. சதாசிவ** அடிகளால் பார்வையிடப் பெற்றது.

# முகவுரை.

இதிகாச மிரண்டினுள் கம்பர் ராமாயணம் மிகச்சிறப்புற்ற தென்பது ஆன்றோர் கருத்து அக்காவியமானது மிகவும் கடின மானதாலும் யாவரும் யெளிதிலுணர முடியாமலிருப்பதாலும் அதனை யெளியநடையில் யாவரும் உணரும்படியாக அம்மானைப் பாவாச் செய்துதர வேண்டுமென்று இவ்வூர் பிரபல மிராசுதாரும் மஞ்சள்வயல் ஸ்ரீ பாலசுப்பிரமணியசுவாமி கோயில் ஆதீனதர்ம கர்த்தாவிலொருவரும் தாமரங்கோட்டைப் பஞ்சாயத்துப் போர்டு பிரசிடெண்டுமான **ஆ. வை. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள்** ஆக்கியாபித்தார்கள் அன்னாரின் பணியை மறுக்கமுடியாததாலும் கடவுளின் புனித சரித்திரமானதாலும் ஏதோ என் சிற்றறிவிற்கு யெட்டியவாறு ஆதியந்தம் சுருக்கமாகவும் கம்பர் காவியத்தைப் பின்பற்றியும் சிலபடலங்கள் விரிவாகவும் பாடி முடித்திருக்கிறேன் இதில் ஏதேனுங் குற்றமிருந்தபோதிலும் குற்றம் நீக்கிக் குணத்தையேநாடுவது ஆன்றோர் கடமையேயாம் அல்லாமலும் இதைப்பாடும்போது என்னுடன் கூடயிருந்தும் என்னை ஊக்கி வித்தும் காயிதமுதலியவை கொடுத்துதவியும் நாள்ஒன்றுக்கு இருமுறை என்னைத்தூண்டியும் என்னை உற்சாகப்படுத்திய மேற்கண்டஸ்ரீ சுப்பிரமணியபிள்ளை அவர்களுக்கு என்றும் மரவா நன்றி உரித்தாகுக.

இப்படிக்கு,

**T. K. இராமலிங்கம்**

**ஆயுர்வேத வைத்தியம்**

**செங்கப்படுத்தாங்காடு.**

உலகம் யாவையுந் தாமுள வாக்கலும்
நிலைபெறுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகிலா விளையாட்டுடை யாரவர்
தலைவ ரன்னவற்கே சரணங்களே.

தருகை நீண்ட தயரதன்றுன்றரும்
இருகை வேழத்தி ராகவன் றன்கதைத்
திருகை வேலைத் தரைமிசைச் செப்பிடக்
குருகைநாதன் குறை கழல் காப்பதே.

நாடியபொருள் கைகூடும் ஞானமும் புகழு முண்டாம்
வீடியல் வழியதாக்கும் வேரியங் கமலை நோக்கும்
நீடியவரக்கர் சேனை நீறுபட்டழிய வாகை
சூடிய சிலையிராமன் றோள்வலி கூறுவோர்க்கே.

அஞ்சிலே யொன்று பெற்றானஞ்சிலே யொன்றைத் தாவி
அஞ்சிலே யொன்றா றாகவாரியற்காக யேகி
அஞ்சிலே யொன்று பெற்ற வணங்கைக் கண்டயலாரூரில்
அஞ்சிலே யொன்றை வைத்தா னவனெம்மை யளித்துக்
காப்பான்

## சாற்றுக் கவிகள்.

திருத்துறைப்பூண்டித் தாலுக்கா, அம்மளூர், சங்கேந்திட திருவள்ளுவரில்லம் **கு. க. சதாசிவ அடிகள்** இயற்றியது.

### அறு சீரடியாசிரிய விருத்தம்.

சொல்வல்ல கவியரசன் கம்பனெனும் பெருஞ் சீர்த்தித்
தூய்மையாளன்
பல்விதத் தவளமாரு மயோத்திநகர் ரகுராமன் பண்பைப்
போற்றிக்
கல்விகற்றோர் கருத்தூன்றிக் கற்குமி ராமாயணமாம் கவினார்
நூலின்
நல்விதத் தசாரமெலாம் அம்மானையாய்த் திரட்டி நன்கே தந்தான்.

அன்னவன்றன் அருஞ் செங்கப்படுத்தான் காட்டுறை
வேளாண் மரபில் வந்தோன்
பன்னருநூல் நன்குணர்ந்தோன் இராமலிங்கப் பெயருடையான்
பரிவிற் சொற்ற
நன்னயமார் ஸ்ரீராமன்றன் காதை நலமுடனே கற்போர்
கேட்போர்
இன்னலங்கள் பல பெற்றே மனைமக்கள் இன்பமுடன்
இனிதே வாழ்வர்.

பட்டுக்கோட்டைத் தாலுக்கா, செங்கப்படுத்தாங்காடு **நா. இராமலிங்கம் பிள்ளை** அவர்கள் பாடிய,

## எண் சீரடி ஆசிரிய விருத்தம்.

அம்புவிதனிற் கம்பராமாயணந்தன்னை அரிய செந்தமிழென்னவே
யரும் பொருள் நிறைந்திடு மிதிகாச முருகவிகளாய்ந் தறிவத
ருமையதனல்.
சம்புவால் ராமருப தேசமோர்தி ருவுசாத்தல புராணத்திலுற்ற
தாமரங்கோட்டையார் செங்கமலாபுரிதனிற் சார்ந்திடுந்
தகுதியாளன்.
உம்பர்பணி நம்பனிருபாதத்தி லன்பனுயுயர்கல்வி கற்றமேலோன்
யுயர்வுபெறு **காத்த வேளாளர்** சுதனும் **ராமலிங்க**
மென்றுற்ற தூயோன்.
கம்பர் காவியந்தனை யம்மானை பாடினும் களிப்புறச் செய்ததாலே
கற்றவர்கள் கேட்டபேர் பாடினேர் நீடூழி காலம்வரை வாழ்க
வாழ்கவே.

பட்டுக்கோட்டைத் தாலுக்கா பரக்கலக்கோட்டை **ச. ஆ. சிவசாமித் தேவர்** அவர்கள் பாடிய,

## அறு சீராசிரிய விருத்தம்.

பல்வளனும் பொருள்வளனும் மிகச்செறிந்த கவிவள்ளல்
கம்பன் பார்மேல்

நல்வளஞ்சூழ் அயோத்தி நகர் ரகுராமன்
சீர்ராமாயணமாம் நூலை
நல்விதமாய் அம்மானையாய்த் திரட்டி வகமகிழ நமக்கே தந்தான்
கல்வி கற்றோர் மிக மகிழ்ந்து தேன்பாகு வமுதமெனக்
களிக்கமாதோ
அன்னவன்யா ரெனக் கேட்பினருட் செங்கப்படுத்தான்
காடெனும்மூர் வாழ்வோன்
துன்னுபரன் கழற்கன்பன் யெனக் கினியோன் கடலனைய
தொன்னூல் கற்றோன்
மன்னுபுகழ் வேளாளர் குலத்துதித்தோன் ராமலிங்க மகிபன்
தூயோன்
இன்னூலைப் படித்தோரும் கேட்டபோரும் ஞானமதை
எய்து வாரே.

தஞ்சாவூர் தாசில்தார் **S. இராமச்சந்திரப் பத்தர்,** கூறிய வாழ்த்து.

## இன்னிசை வெண்பா.

கம்பன் அளித்த கருநூல மாக்கதையை
நன்பன் இராமலிங்க நாவலவன் — பைந்தமிழில்
அம்மாணை யாக அளித்தான் அனைவோர்க்கும்
செம்மையுற வாழி செழித்து.

உ

## அவையடக்கம்.

சீர்நிறைந்த வைங்கரனின் செய்யதிருத்தாள் போற்றி
வார்பூட்டுங் கொங்கை மின்னார் வாமபாகத்தி லிலங்கும்
பெம்மானைப் போற்றி யிருபுண்டரீகத்தாள் போற்றி
அம்மான் மகளனைந் தோனருட் கோயில்கொண்டெழுந்த
மஞ்சுலவு சோலைவளர் மஞ்சள்வயல் வாழ்குகனின்
கஞ்சமலர்ப் பதத்தைக் கருத்திலிருத் தியேதான்

வெண்டாமரை மலரில் வீற்றிருக்கும் மாதாவே
பண்டுவினை போக்கியுந் தன்பத மெனக்குத் தந்தருள்வாய்
செங்கண்மால் காதைதனைச் செப்புதற்கு வென்னுவில்
பங்கமிலா திருந்து பட்சமுடன் காத்திடுவாய்
சீரோங்கு மென்குருவாம் செய்யமெய் கண்டனருட்
நாரோங்கும் பொற்பதத்தை நன்றாய்ச் சிரமணிந்து
பாரோங்கும் மால்கதையைப் பகருதற்குப்பூ வுலகில்
நாடோ தமிழ்நாடு நாவலரோ வெண்ணரிய
கோடானகோடி சங்கம் கூடுந் தமிழ் நாட்டில்
காரிகை நன்னூல் நிகண்டு கற்றுமரியாதவன் யான்
பாரிலுயர் பெரியோர் பார்த்துப் பிழை யிருந்தால்
கொண்டுமனம் பொருத்துக் குழந்தைபோல்த் தான்நினைத்து
கண்டுகளித்துக் கருணை புரிந்திடுவீர்
நாரணன்தன் கதையை நானுரைக்க வல்லவனோ ?
ஆரணங்கின் தன் செயலாலறையலுற் றேனுசையினுல்
சீரிலுயர் கதையைச் செப்ப முயன்றது யான்
பாரிலுயர் பாற்கடலைப் பருகவே சிற்றெறும்பு
சென்றது போலிருக்கு மந்தத் திருக்கதையை யான் பாடல்
கொன்றரக்கனைத் துலைத்த குலராமன் காதைசொலல்
நீர் கடல்சூழ் மண்ணுலகை நிருக்க நினைத்த தொக்கும்
கார்கடல் மேனிக் கருணுகரன் கதைசொல்
தொல்புவியையோர் நொடியிற்சுற்றி வருவேனென்று
காலிரெண்டு மில்லான் கழறியது போலிருக்கு
பூவுடனே கூடிய நார் புனிதர் முடிமேலிருக்கும்
பாவுடனே கூடியசொல் பழுதிருந்த போதிலுந்தான்
ஓதிமம்பாலருத்தி உறு நீரை நீக்குதல்போல்
கோதகற்றி மேலோர் குணமதனை நாடிடுவீர்
கொண்டு மனம் பொருத்துக் குறைகளிருந்தாலும்
பண்டு விளையாடல்செய்த பரந்தாமன் தன் கதையால்
கண்டுகளிப்பீர் கவிவாணரெல்லோரும்.

## கம்பர் ராமாயணக் கருப்பொருள் அம்மானை.

அத்திமுகத் தோனே யரனார் திருமகனே
சத்திக் கணபதியே தற்பரனே முன்னடவாய்

கார்த்திகை பாலன் கழல் சரணங் காப்பாமே
நாரணன்றன் கதையை நானுரைக்க வென்னுவில்க்
காரணனே வந்து கடாட்சித் தருளுமையா
மாசற்ற நாடு மாதேவ லோகமொத்த
கோசலை நாடாண்ட கொற்றவனின் புகழை
ஆசைவயத் தாலுரைய லுற்றேன் சிலது
தாயொக்கு மன்பிற்றவமொக்கும் நலம் பயப்பின்
சேயொக்கு முன்னிறொரு செல்கதியு மொக்கும்
நோயொக்கு மென்னின் நோய்க்கும் மருந்துமொக்கும்
ஆயப்புகுங் காலறிவொக்கு மெல்லோற்கும்
வெள்ளம் பறவைகளும் விலங்குகளும் வேசியர்கள்
உள்ளமொரு வழியாயோடவும்மே நின்றவன் காண்
புலியும் பசுவும் பொருந்தியே யோர்துறையில்
நலியாமல் நீரருந்த நகராண்ட வனிவன் காண்
பையரவும் கலுழன் பகையின்றியோர் கூண்டில்
நையாமல் வாழ நகராண்ட வனிவன் காண்
மஞ்சு நிற மஞ்ஞையுடன் மாலரவு மோங்கியொடு
கொஞ்சி விளையாடுங் கோசலை நாடிதுவே
சம்பரனைத் துலைத்தும் சசிகேழ்வன் வாழ்வளித்தும்
உம்பர்களைக் காத்து முலகாளவைத்தோன் காண்
* ஓதி * சிகரியும்மே ஒருசயனமா யிருந்து
நீதியுடனிருந்து நிருவியதோர் நாடிதுவே
ஆடுகின்ற திண்கொடியே அயோத்தியெனு நாடதற்குத்
தேடும் புகழுடைய தெசரதனென்பா னரசன்
அவ்வரசன்றனக்கு யாயிழைமார் மூவருண்டு
செவ்வரி படர்கண்ணாள் சேயிழையாள் கோசலையும்
உற்றதொரு கைகேசி உயர் சுமித்திரையெனும்
மற்ற றுபதாயிரம்பேர் மடவார்களுமுண்டு
சொற்ற தொருமன்னவனுஞ் சுடர்வேள்வி தான்முயன்று
பெற்றதொரு மைந்தர்கள்பேர் பிறங்குவேலி ராகவனும்
பரதனிலக்குவனும் பண்புடைய சத்துருக்கன்
வரதனிவர்களுடன் மாவரசாண்டிருந்தான்
இன்னமா நிலந்தனையு மிப்போ படைப்ப தொரு
சொன்னதொரு வேள்வி சுருதி முறையியற்ற

---

* ஓதி = பூனை
* சிகரி = எலி

உன்னுடைய மைந்தனி ராமனையே தந்திடுவாய்
என்னுடய வேள்விக் கிடையூறைத் தான் தீர்க்க
கன்னல் மொழியுடைய கௌசிகனுந் தானுரைத்தான்
அன்ன மன்னவன் வருந்தி யாகா தெனவுரைத்தான்
அன்னதொரு சொற்கேட்டு அதிகோபம் தான்மூண்டு
மின்னல் மின்னி மாறுதல் முன் மிகமுனிவு தான்பெருகி
எங்கு மிருள்மூடி யிருண்டது போலாயதுவே
என்னவார்த்தை நீசொன்னாய் யென்றான் விசுவாமித்திரன்
சொன்னவுடன் வதிட்டன் தூய்யோனைப் பார்த்துரைப்பான்
உன்னுடைய மைந்தற் குறுவிஞ்சை வந்திடுநாள்
மறுத்திடாதே யென்று மாவதிட்டன் தான்மொழிந்தான்
பொருத்தியே ல்லென்றவனின் பொன்னடியைத் தான் வணங்கி
உறுத்தியே மைந்தர்களை யுவந்தே யளித்தானே
சந்தோடமாய் முனியும் தானழைத்து மைந்தருடன்
வந்தான் வனந்தனிலே மாவேள்வி தான் முடிக்க
வெவ்வியச் சினமுடைய வீரர்களை விடுத்தே
அவ்விடத்தில் மாமுனியு மமைத்தானே வேள்வியையும்
எவ்விடங்கள்தோறு மிராக்கதர்கள் வந்தார்த்தார்
வெவ்விடச் சரமதனால் வானம் மறைத்தனரே
கண்டதொரு வீரன் கடுஞ்சுதனுந் தாடகையும்
சண்ட வேகத்தனையுஞ் சரத்தாலறுத்தானே
துண்டமது செய்து மற்றோர் சுதனையுமே தொல்கடலில்
மண்டிடவே செய்தான் முனிவன் மகிழ்ந்தானே
இங்கிருந்த மாமுனியு மெழில்வண்ணன் தம்பியுமாய்
மங்குல் சூழும் வரையும் மாவனமுந்தான் கடந்து
பண்டையுருக் கரந்த பாறைய கலியைப் பணித்து
விண்டொடு மதின்மிதிலை விரைந்தே யடைந்தனரால்
சனகர் கோன்தனை யடைந்தார் தழல்வேள்வி தான்முடித்த
முனிவரே யாரிவர்கள் மொழியென் றெனவினவ
வினயமது வேரில்லை விறற் புனை தயரதனின்
தனயர்களுன் னுடைய தனுக்காண வந்தனரால்
என்னவே ஜனகனுந்தா னெழில்மிகுந்த ராமனையும்
பன்னிரு கண்களதால்ப் பருகியுமமே தான்மகிழ்ந்தான்
சந்திரனைத் தானணிந்தோன் தனிவில்லுக் கொப்பான
வந்த நெடுஞ்சிலையை வள்ளல் வளைத்தானே
அந்தர வானில் யமரர் மலர் தூர்த்தார்கள்

தந்தை யுகந்திடவே தான்சார்ந்திடு மென்று
சனகனு மப்போது தயரதருஜனுக்கோர்
துணியுறு மோலைதனைத் தூதோடு மேவினனே
தனயரொடுங் கிளர்ந்த தவமுனிவர் தன்னோடும்
வினையம் வலான்மா மதின்மிதிலை தானடைந்தான்
தெள்ளமிழ் தன்புரையுஞ் சீதையையு மன்பாக
வள்ளலி ராமன் மகிழ்ந்து மணந்தானே
முள்ளில வெயிரிதழும் மூவரையு மப்போது
வெள்ளிலை வேலவரும் மூவரும் வேட்டல் செய்தார்
அன்னகர் தன்னைய கன்றுவப் பாலேகி
மன்னு *மழுப்படையான் வன்சிலையைத் தாளுடித்து
அன்னவனைத் தவமுமாற விடுத்தேகிப்
பொன்னணியு மாடவையோத் தியினிற் போந்தனரே
அரியணையின் மீதிருந் தரசாள் தயரதனும்
வரிகழல் மன்னன் வதிட்டன் றனைப்பார்த்து
உரியதவம் புரிவேனென் னுடைய மைந்தனுக்கே
விரிகதிர் மௌலீ மிலச்சுமி னென்றுரைத்தான்
அன்னது கூனி யறிந்ததைச் சொல்லிடவே
கன்னன் மொழிக்குயிற்கை கேசியுங் கேட்டே
மன்னவனே நீ முன்னளித்த திருவரத்தால்
என் மகனுக் கரசை யீந்திடுவாய் யென்றுரைத்தான்
வடிவுடைய மன்னன் மயங்கி விழுந்தானே
நெடில்படு கானகமே நீ புகுவென்று சொல்லி
கொடியவள் சீறை கொடுத்தாள் காணம்மாளுய்
மலர்க் குழலாள் தன்னோடும் வார்சிலைவன் கையோடும்
இலக்குவனோடு மிராகவனு மப்போதே
அலக்கணு ருமலயோத்திதனைக் கடந்து
நலக்குரு கெங்கை நறுங்கறையை நண்ணியும்மே
அங்கணி ருங்குகனும் நம்பிவிடப் போந்து
கங்கை கடந்துமே தான் கங்குலிலே யவ்விடமோர்
கொங்கலரும் சித்திரத்திரத்தின் கூடமதைத் தானடைந்தார்
சித்திரகூட மடைந்தாரெனக் கேட்டு
அத்தனரிந் திவடமாருயிரைத் தானும் விட்டான்
வித்தக மாமுனியும் மெய்பரதனுக்கு மொரு
உய்த்தன னோலையையும் முணர்ந்து கொண்டுவந்தானே

---

* மழுப்படையான் = பரசுராமன்

மன்னனுக்கும் மைந்தனுக்கு முற்றது கோலென்ன வென்று
அன்னையவள் கூற யரிந்து மனமுருகி
என் செய்தாய் பாவியென்றேங்கி யிரங்கலுற்றான்
தன்னையும்மே மாமுனிவன்றான் வந்து தேற்றினனே
இன்னதொரு தந்தைக்கிங் கீமக்கடன் செய்த
பின்னையும்மே மாமுடியுஞ் சூடென்று பேசிடவும்
பன்னுகின்ற மாலைப் பரதனி ராகவனைத்
தன்னையுமே நாளைத் தருவேனென்றேகினனே
சடையுமேவற் கலையுந்தான் தறித் தாங்கு யிரு
புடையதனிற் றுயர்களும் மன்னவரும் சூழ்ந்துவர
இடையினிற் கங்கைக் குகனோடு மேறியே போய்க்
கொடியடர்ந்த சித்திரத்தின் கூடமதைத் தானடைந்தான்
வையமது யாளுடைய மன்னை வணங்கியபின்
ஐயனது வானமடைந்ததனைக் கூறிடவும்
ஐயோ கோவென்று யறற்றியி ராகவனும்
கையதினாலே கடனதுவுந்தான் கழித்தார்
ஆதியுட மாமுடியுஞ் சூடென்றடி தொழவும்
போர் நீயேழி ரெண்டாண்டு பொருத்தி யென்று
ஏதமுமின்றி யிராகவனுங் கூறிடவும்
பாதுகங்கள் கொண்டு அவனும் படர்ந்தானே
விடங்கொண்ட வேற்கை விராடனையும் வீட்டியே போய்
தடங் கொள்ளும் வீடு சரபங்கனுக் களித்து
தடங்கொள கத்தியதனைத் தான்தெரிசித்தேகி
இடங்கொள்ளும் பஞ்ச வடியதனிற் சென்றாரே
மங்கையவள் சூர்ப்பநகை பெரிதும் மையலினால்
செங்கைவிலி ராகவனைச் சேரவா வென்றழைத்து
நங்கையவள் சீதையையும் நாடியே யெடுக்கலுறாள்
கொங்கையொடு நாசி குழலோடறிந்த பின்பு
அங்கை யாற்றன்னுடைய வயிறலைத் தோவென்று
கங்குலுட வாழ்க்கைக் கரனுக்குரை செய்தாள்
கரன் தூடணனும் கரியும் பரிப்படையும்
திரிசிரா வென்றுரைக்கும் சினப்படையி னீட்டமுடன்
வரனி ராமன் கையால் வதைத்ததெலாங் கடிது
உரைசெய்தாள் சென்று ராவணற்கு வோடியப்போ
சீதை மற்றவன் றேவி தேவியையான் கொண்டுன்பால்

* பாதுகம் = ஸ்ரீ ராமன் பாதக்குறடு

போதலுற்ற போது போக்கினர் மானிடர்கள்
காதலுற்று ராவணனுங் காணுகின்ற ஆசையினல்
மாதுலன் தன்னிடத்தோர் மாற்றமது சொன்னனே
மறுத்துரைத்தான் மாமன் மாரீசனென் போனும்
வெறுத்துமே தானுரைத்தான் வெஞ்சொலி ராவணனும்
பொருந்தி நீயென்று சொல்லிப் பொன்னிள * நவ்வியதாய்
நிறுத்த தொரு சீதை நிலையதனிற் சென்று நின்றன்
கண்டுமே சீதை கவர்ந்ததனைத் தாவென்ருள்
அண்டருட கோனுமதன் பின்ன ரேகியேதான்
கொண்டதொரு மாய்கை யறிந்தே கொலை செய்தான்
ஒண்டொடி யிளையோய் யென்றே யுலைந்ததுவே
அன்னமன் னவள்தானு மவ்வுரையைக் கேட்டவுடன்
தன்ன தொரு நாயகனின் றம்பியையு மேவினளே
பன்னக சாலையினிற் பார்ப்பன வேடமதாய்
இன்னல்களுஞ் செய்யயி ராவணனுஞ் சென்றனே
மானத்தின் மீது மடந்தையையுங் கொண்டகன்றன்
போனதொரு போது புகுந்த சடாயு வினை
ஈனமது செய்து தானேறியதோர் தேர் செலுத்தி
மீன் சூழும் வேலையிலங்கையது சென்றனே
மன்னனி ராகவனும் மாதம்பியை வினவ
என்னை யென்னை யென்று வியன்ற துரை செய்தான்
பன்னக சாலையினிற் பாவையையுங் காணமல்
முன்னமே வீழ்ந்த சடாவையு முன்னினரே
இரந்த * வெருவைக்கரசை யீமமதிற் சேர்த்து
முறஞ் செவியயோ முகியை மூக்கினையு மேயரிந்து
மரந்தருக வந்தனையும் வானினிடையேக விட்டு
அறந்திகழ் தருஞ்சவரியாய்ச் சிரமமுற்றரே
மிக்க சவரிக்கினிய வீடருளி விட்டுமேதான்
பக்கமது மிக்கமலர் பம்பையதைக் கண்ணுற்று
அக்கண மகன்றனும மனுமென வுறைத்திடவும்
சுக்கிரிபனைத்துணை யெனத்துடர்பு கொண்டாரே
மந்தர மெனத்திகழ் மராமரம தெய்தபின்பு
துந்துபிகளே பரமதைச் சுவடிருத்தியும்மே
இந்திரமகற் கிமயலோகமருள விட்டு
அந்தமுடன் வாளவன் மகன்பெறவுமே யளித்து

---
நவ்வி = மான்

சுக்கிரீபனுக்குறிய சுடர் முடியையுங்கவிழ்த்து
மிக்கதிறல் வானரர்கள் மேவி வருகவென்றார்
கக்குமுகில் மிக்கமழை காலமகன்ற பின்பு
இக்கண் வருவாயென்று பிராகவன் விடுத்தானே
சுந்தர னுமத்துணைத் துயர்க்கடலுளாழ்ந்தானே
இந்திரன் மகற்குறிய தெய்தினனிருந்தானே
வந்திலன ருக்கன் மகன் மாரிக்ழிவுற்றுமேதான்
தந்தனே யெனக்கடிது தம்பியையும்மே விடுத்தான்
மற்றவனழைத்தருள மாருதியுமேனையர்கள்
கொற்றவனும் வந்தனனி ராமனடி கூடியங்கு
எற்றது செயகடவ தென்றனனிருந்தார்கள்
முற்றிழையை நாடவிடு யென்றிறையும்மே மொழிந்தான்
அன்றனு மனங்கதன றிந்தருள் செய் சாம்பனுடன்
என்றிவர்கள் தன்னுடனிரண்டு கவி வெள்ளமொடு
சென்றனர்கள் தென்றிசையினிற் கடிது கில்லோர்கள்
பென்றலிற் பிலத்திடை புகுந்தனர் பெயர்ந்தார்கள்
குன்று நதி முதலாய்க் குழைந்ததொரு கானகமும்
தென்றிசை யெங்கிலும்மே தேடியெங்குங் காணூர்கள்
இன்றே வுயிர்விடுவோமென்றே மனதி லெண்ணி
மன்றலது சேரும் மகேந்திரவறை மேவினறே
இறைவனுயாண்டிருந்த * வெருவையெனும் வேந்தனும்மே
முறைமையால் வந்தவெலா மொழியவே கேட்டபின்பு
அறைகழ லனுமானு மறக்கியுட வாய்பிளந்து
எறிகடல் கடந்துமேபோய் யிலங்கையையு மெய்தினனே
எரிவிழி யிலங்கைமா தேவியையுந்தான் வதைத்து
கருநிற வறக்கர்தங்தள் கனகமாளிகை தோறும்
தெரிவையை யெங்கிலும்மே தேடி யெங்குங் காணமல்
அரிமலர்ச் சோலைகண்டு வாழியையுங் காட்டினனே
மானவ னறிந்தருள்செய் மதுரமுள்ள மாமணியைய
சானகியுமளித்து விடையுங் கொடுத்தனளே
யானிவடம் வந்துவிண்யேகுதலுந் தீதென்று
போனதொரு மாருதியும் பொழிலையும்மே வாட்டினனே
காட்டொரு வானரமுங் காவல்கொண்ட சோலையையும்
வாட்டினதென்று காவலர்கள் சென்று சொன்னூர்கள்
கேட்டான்ற சமுகனுங் கிளர்ந்ததொரு சேனைகளை

---

எருவைவேந்தி = சம்பாதி

விட்டானத னெதிரே யனுமனங்கு முன்னினனே
அக்கனைத் தறைப்படுத்தி யறைத்த ரத்தமிக்கெழவே
தக்கசப்புமாலியையும் தறைப்படுத்தி வெற்றியுடன்
பக்கநின்ற பஞ்சசேனை மன்னரைப் படுத்தினனே
* மேகநாதன் வந்தெதிர்த்து மோதநான் முகன்றந்த
நாகபாசம் விசி ஞானநாதனைக் கொணர்ந்தனனே
ஓசைவாளி ராவணற் குறைத்தலு முறுக்கெழுந்து
ஏகவாலிபங் கிபிட்டுயெறித்தி யென்றியம்பினனே
வாலின்வைத்த தீயை மாடமாளிகைக் கண்வைத்தலும்மே
சாலவந்து சீதைதனைப் பணிந்து சாகரத்தை
காலினுலேகிக் கவிகுலத்து வீரர்கள் தாம்
வேலைசூழ வேலிராமன் விட்டசோலை கிட்டினனே
மன்றலோதி தந்தொரு மணியைநல்கி மாருதியும்
நின்று வாசகங்கள்கூறி நீடுவேலி ராமனும்மே
என்றின்மைந் தவிப்பதா தியெழுக வென்றெழுந்ததுவே
தென்றிசைக் கருங்கடற் றிறைப்புரத்து வந்ததுவே
கடற்கரையில் நின்றான் கவியினுட சேனையொடு
அடற்படையைத் தாங்கு மறக்கனுட யேவலினல்
மடற்கமலத் தயனுமயனுமே பண்டதுபோல்
படைத்தானி லங்கையையும் பணித்தமொழி கேட்டு
மேலுயர்ந்த மண்டபத்திலே யிருந்து வெய்யவனும்
தோலியல் குரங்கிவ்வூர் சுட்டதா வென்றெண்ணி
மாலியவான் முதலாய் வல்லரக்க ரெல்லோரும்
ஓலுயர் கடலெனவே வுளைவுளைந்து கூறினர்கள்
மைந்தனிந்தி ரசித்து மௌலியானப் போது
தந்தை தன்னொடுகூறத் தநந்தா னிலங்கையர் கோன்
தந்தபோ தவர்கள் தங்கட் கயில் பட்டு
வெந்ததொரு புண்ணெனவே விடணனுங் கூறினனே
இரணிய னென்பவனும் யாவர்களினும் வலியான்
முரணியனவனிவனும் முனியவே மாய்ந்துவிட்டான்
அரணிய னெஞ்சினனு மன்னவனின் தேவியையும்
தரணியின் தாயைவிட்டுத் தானருளல் தக்கதென்றான்
என்றலும்மே ராவணனு மெறியுகின்ற சிந்தையினான்
நின்றனையேலிங்கு நிணக்குடர்கள் தான்சொரிய
கொன்றிடுவே னென்றுகுலை குலைந்தான் லங்கையர்கோன்

---

மேகநாதன் = இந்திரசித்து

தன்றுணை நால்வருடன் தர்ம விபீடணனும்
வென்றிகொளி ராகவனின் சரணம் வந்தடைந்தானே
கடலுடைய லங்கையரண்கள் முதல்க் காவலனின்
உடயதொரு வரமும் மைந்தர்களி னாற்றமுடன்
படையின நீட்டங்களும் பகருவாய் நீ யென்றான்
அடைவாளி ராமனுக்கு வரக்கனுமமே கூறினின்றான்
வேண்டின னொருவழியே வேலையுட வேந்தனையும்
ஈண்டி யிலங்கை நகற் செய்தலு மின்மையினால்
நூண்டினன் சுடுசரத்தைத் தொல்வருணன் வந்துநின்று
ஆண்டகையின் ராமனுட வடியதனில் விழ்ந்தானே
ஆனபேர் வேலையதனை யடைத்த பின்பு
மானவர் தலைவனுந்தான் வானவரேசருடன்
கோனகரின் புரத்துக் குன்றே யிருந்த பின்பு
ஊனமில் ராவணனும் வொற்றரையு மேவினனே
பற்றினன் சாரணனும் சுகரையும்மே பன்முறையாய்
சொற்றவர்கள் கண்டசொலத் தூயோனு மப்போது
விற்றொழிலின் விடணற்கு வரசதுதான் விட்டதுவும்
கொற்றவனுக்கோ தென்று கூறினனம் மானாய்
சேதுவுட பந்தனமும் விடணனின் செய்தியையும்
தூதுவந்து சென்றவர்கள் சொல்லத் தசமுகனும்
ஓதுகின்ற வெவ்வுரையை வோதினனே வப்போது
ஏதமுமேயின்றி யெழுந்தானி ரவியும்மே
இலங்கையுட வேந்தனி ராமன்படை காண
இலங்கையுட மாளிகையின்தலை மலையெலா மேற
இலங்கையர்கோன் முடிபறித்து யிரவிசேய் தானகன்றான்
இலங்கைக் கரசு மிராமனுந் தன்னிட மடைந்தார்
நாலுமுள வாயிலிலும் நரர்வானரர் சென்றார்
ஓலமுள வேலையினி லுரைத்தன ரெனவுரைத்தார்
ஆலகால வேலரக்க னணிபடையைத் தான்வகுத்தான்
வேலினி ராகவனு மங்கதனைத் தூதுவிட்டான்
சீதையெனு மத்திருவை விட்டுன்சிரம் பெருகென்
றோதிவிட்டானி ராமனெனு மங்கதனுரைத் திடவும்
போதி போதி யென்று யிராவணன் புகல ராமன்
பாதபங்கயம் பணிந்தா னெழுந்த பதாதிகளும்
அரக்கனுட வஞ்சுபத்து வெள்ள மனிகமுடய
குரக்கினுட வேந்துமனுமன் நீலன் கொதித்தார்
அரக்க னவ்வுரைகேட்டு வந்தடுத்தனு மனுமான்

குரக்குத் தலைவனு மற்றவரவரும் தான்பொருதார்
இளையதொரு வீரனையு மிராவணன் சிலைகள் பத்தால்
உளையவே யெய்தானவனுடல மெங்குமேதான்
வளைவாளெயிற்றுடையான் வெளவுவான் செல்கையிலே
இளையதொரு வீரனையும் மாருதியுங் கொண்டகன்றான்
ஆளியாயிரம் பூண்ட தேரரக்கன் வந்தடர்த்தான்
காளைமாருதி தோளில் ராமன் கடந்து நின்றான்
மூளுவார் சிலைகள் பத்தும் முடிபத்துமே யொழித்து
நாளைவா பொரயென்றான் நகர் சென்று புக்கானே
மூலபலத்தானையையும் முடுக்கெனத் தூதுரைத்தான்
கோலமுள்ள பள்ளியினிற் குருகலுங் குரவன் வந்து
சாலமுடன் சாம்பினையே யென்றவனுஞ் சாற்றி நின்றான்
மாலையுள திண்புயத்து மகோதரனு மீதுரைத்தான்
கும்பகர்னன் தன்னை யழை யெனத் தூதர் கொணர்ந்தார்
எம்பியியற் றென்றானி கற்போர் மனிதருடன்
வெம்பு போர்க்களம்புகுந்தான் வீரன் கும்பகர்ணனும்மே
தம்பி தருகென்றான் றசமுகவனுக் கிளையோன்
வியந்து வீடணனழைக்க வெய்யோன் மறுத்துரைத்து
வயந்தனைப் பிசைந்தருக்கன் மாமகனைக் கொண்டகன்றான்
இயைந்ததொரு நாசி கொண்டு யிரவி சேய்தா னகன்றான்
உயர்ந்தம்பால் ராமனுவரியிலிட்டான் றலையை
அப்புரத்தில் வன் மருந்தனைச் சனகர் கோனுக்கி
குப்புரத்தான் மகோதரனுஞ் சீதை குலை குலைந்தாள்
எப்புரத்தினும் நின்று யிராவணன் சேனை யெல்லாம்
இப்புரத்தும் நின்றார்த்த யிராவணன் சேனையெல்லாம்
கும்பகர்ணன் தானுங் குறைந்ததனைக்கூறிடவும்
தப்பி யென்று தானறற்றித் தசமுகனுமப்போது
அம்பொற்றேறதி காயனையு மேவி விட்டான்
எம்பி யிளையோனெதிர்நின்று தாக்கினனே
எதிரெதிர் தாக்கியிரு சேனைதனை யப்போது
கதுமென்றிருகவனின் கனுட்டன் நின்று போர் பொருதி
அதிர்கழல் புனையதி காயன் மயங்கி நிற்க
சதுர்முகன் கணையதினாற் றலையையும்மே தள்ளி விட்டான்
குரக்கினுட வேந்தர்களும் குன்று கொண்டு யேகலும்மே
அரக்கருட மைந்தரனைவர்களு மாண்டார்கள்
பரக்கவே வன் கொலையின் பாடுகண்டார்கள் சிலர்

இரக்கமுடனெய்தி யிராவணற்கு வோதி நின்றார்
அரக்கனும்மே வவ்வுரையைக் கேட்டலும்மே வப்போதே
இரக்கமுமுற்றி ந்திர சித்துவையு மேவினனே
குரக்கினுட வேலையையுங் கொன்றானே கொன்றமன்பு
தரையதுக்கு நாயகனின் றம்பியையும் யெய்தினனே
எறதுவுந் தானழுங்க விலக்குவனின் மேனியின் மேல்
கூறதுவுந் தானழுங்க நெடுஞ்சரமுங்கூட்டி நின்றான்
தேரதுவுந் தானழிந்து தசமகனின் றிண்மகனும்
பேரதுவுந் தானழிந்து விசும்பினிடைப் போனானே
இடந்தரு யிராகவற்கு யிளையதொரு காளையையும்
தடம்புனை யெழுபத்து வெள்ளமுற்ற தானையையும்
அடங்கலு மிந்திரசித்து யல்லிடைபோலே யாக்கி
விடந்தரு நாகமெனும் பாசத்தால் விக்கினனே
போயினான் தானறக்கன் புரண்டுமே வானரர்கள்
கூயினா ராகவற்கு யனலனுங் கூறிடவும்
மேயினா ருகவனும் *விசுங்கரு சனப்போது
வாயினா னுரகனைப்படுத்தி வல்விசும்பிற் போனானே
சென்றதொரு தூதுவர்கள் சொல்லத் தசமுகனும்
தன்றகு பெரும்படையின் றலைவனையுங் கூவிநின்றான்
நின்றிலர்கள் கொன்றனர்கள் நிசிதர்கள் தங்களையும்
கொன்றனர்கள் வானரர்கள் தலைவர்களும் குன்றதனால்
உரைகேட்டு மைந்தர்க் குரைத்தா னறக்கனுமே
கரன்மகன் மகரக் கண்ணன் செல்கெனக் காற்றம்பும்
வருணன்ற னம்பும்விட மாயையென்று ராமனும்மே
பொருசரமொன்ற தனாற் சென்னியையும் போக்கிவிட்டான்
இற்றவறக் கன்றானை யெழுபது வெள்ளமுடன்
செற்றதொரு வாளறக்கன் சேறியெறான் மைந்தனையும்
மற்றவனுந் தேரேறி வானரரைத் தான்சிரி
எற்று வனிவரையென்று யிலக்குவன் றன்னோ டேற்றான்
அறுபது வெள்ளத்தானை யாயிரந் தேரொடும்
வெருவதுசெய்வே னென்று மயன்படை விடுவேனென்றும
உருவானந் தன்னி-லொளித்ததை யோரான் தம்பி
எரிபடை பூசை செய்வா னெழுந்தானி ராமனிப்பால்
உறைத்தானி ராவணியு ராவணற்கு வுற்றதெலாம்
வறைப்புய மகோதரனை வருகவென்றான் வலத்தால்

---

*விசுங்குருஜன் = கருடன்

கூறைத்தெழும் வானரரைக் கொன்று யினையோன் சரத்தால்
பொருக்கொன் றெழுந்தான் விசும்பினிற் போனானே
முட்டின மகோதரனும் முனிவர மரர்களாய்
சிட்டநீ தென்னை கொலென்றுளந் திகைத்து நின்றானே
விட்டானயன் படையை யிலக்குவன்மேல் *ராவணியும்
பட்டானி லக்குவனும் ராவணற்குத் தானுரைத்தார்
ஏந்தெழில் ராகவனு மிலக்குவன் பாடேங்கி யேங்கி
சாய்ந்தனன் சாம்புவனும் மாருதி தருதியென்றான்
பாய்ந்தான் மருந்துமலை பார்கொணர்ந்தா னயன்படையால்
ஓய்ந்தா ருயிற்பெற்றார் வுரைத்தார்கள் தூதுவர்கள்
யாவதிங்கு நாம் செய்வதென் றியம்பலும் மைந்தன்
ஆவதுண்டென வுரைக்கவது செயென்றே யடைந்தான்
தேவி சீதையாய்ச் சமைத்துப் பின்னனுமன் முன்சிதைத்துப்
போவேனயோத்தியென நிகும்பலை புக்கான்
ஆய தொருவாறதெலா மனுமன்றாக வறக்கறைய
மாயை செய்து விடணனும் வலிக்கின்றா னென்றுரைத்தான்
ஏயகாரியஞ் செய்தீரென் றுரைத்தானெங்கோமான்
போய் விடணனிலங்கை புக்கானோர் மாய்கையினால்
ஆயதொரு மாய்கைகண்டு வறக்கர்கோன் வந்துரைப்ப
வான ரேசனுமிளவல் வடதரு நீழலுற்று
சேனைகளுஞ் சூழ்ந்துவரநீ கும்பலையைத் தான்சிதைத்தார்
போன போதெதிர்ந் திரசித்துவமர் புரிந்தான்
கறுத்திரா வணியு*ர்விட்ட கணைகளெல்லாங் கணையால்
இறுத்துமோ ரம்பதனல் வில்கை விழுவெய்தான்
குறித்துமோர் சூலமதாலினை யோனுயிர் கொதித்தான்
அறுத்துமோ ரம்பாலவன் தலை கொண்டகன்றான்
அறித்துரைத்தனர் தூரரக்கர் கோனுங் கேட்டு
கெடுத்திரங்கினன் மதலைத் தலையிலா வாழ்க்கைதனை
படுத்தான் தயிலத்திடை மூலமாப் படையை
விடுத்தா னடிபணிந்த தாயிரம் வெள்ளமுமே
மூலப்படையை யிராமன் மேற்றான் முடுக்கிக்
* கூலத்தானையின்மேல் ராவணன் சென்றான் கொடியோன்
மூலப்படை சென்று ராமனை முடுக்கக் குரக்குக்
கூலத்தானையிருந்த குறை கடலுக்கப் புறத்தே

---

*ராவணி = இந்திரசித்து
கூலத்தானை = குரங்குப் படை

வேர்த்த கவியையெல்லாம் விறலங்கதன் மீட்பக்
காத்தியெனத் தம்பியையுங் காவலாய்த்தான் விடுத்து
ஆர்த்த வெம்படையாயிர வெள்ளமும் மடியக்
கோர்த்தம்பா லேழுரையின் நாழிதனிற் குறைத்தான்
அத்தன சிலையினவலோட றக்கன் தானடற
வித்தினன் சரம்பலவும் பிளவனும் விட்டறுத்தான்
எத்தினன் நெடும்மோக மாப்படை தொடுத்தெய்தான்
அத்தனச் சரமாழியான் சரத்தினலறுத்தான்
அறிந்துமே கூறிவிட்டான் வீடணனென வயில்வேல்
எரிந்தானவன் மேனிதனி லிலக்குவனுமேற்று நின்றான்
பிரிந்துமே போனனிராவணனுமே பெயர்த்து
சொரிந்ததொரு மருந்தைத் தொல்லனுமான் தான்கொடுக்க
தெரிந்தேவுயிர் தெளிந்தான் சேயோனு மப்போது
சென்றுகூடி ராமனையுஞ் தேசமுகத்தவன் பார்த்து
வென்று மூலத்தானைகட்கு விருந்திடவே தானமைந்தான்
பொன்றின றவரென்று தூதுவரும்மே புகலக்
கன்றினன் களம்புக்கான் கவியெலாந் தானவிய
பூதலமளித்தோன் கூரப்புரந்தரன் கொடுத்த திண்டேர்
மாதலி கொணறயேரி மகிழ்ந்தா னிராமனும்மே
காதின வறக்கர்சேனை கவிப்பெருஞ் சேனையான்ம
கோதரன் றனையாவி குறைத்தான் பகழியொன்றால்
அந்தரத் தறக்கன்போக வமலன்றே ரணுகவிட்டான்
மந்திரமாயை யெய்யஞானத்தால் வள்ளல் மாய்த்தான்
உந்தினசூல மொன்றையு குந்தானனுங் கரத்தால்க்
கந்தரத்தலைகள் பத்துங்கரங்களுங் கணையாற் கொய்தான்
கிளைத்தன சிரந்தோறுங் கேடிலா னெய்யவெய்ய
விளைத்தோர் வாமுளதென் விரிஞ்சன் மாப்படையை விட்டான்
உளைத்தவன் றலத்து வீழ்ந்தானுடற்பிறப் பென்னுமன்பால்
இளைத்தவனடி வீழ்ந்தானிராவணனின் பின்னோனும்
மயன்மகள் வந்துமாய்ந்தாள் வருகென நிருதர் கூவி
புயமலி யிராம வேந்தைப் போற்றி ரெனராமன்
இயமலியிமம் சேர்த்தி யெனலு மரக்கன் சேர்ந்தான்
புயமலி இளையோனைப் பொன்மகுடம் வீடணற்கு
வையமறியச் சூடிவா வென்று ராகவனும்
செயமலி யனுமனையே சேரியென்றான் சீதையிடம்
சென்று வனுமனுடன் வீடணனும் சீதை தன்பால்

நின்றவ ணிகழ்ந்தவாறு நிகழ்த்தி மஞ்சனமாட்டி
ஒன்றிய கலன்கள்பூட்டி வுய்த்தா னிராமன்நோக்கி
நன்றுநீ செய்ததென்ன நடுங்கின ளெறிபுக்குய்த்தாள்
ஏறிட விமானந்தனிலே யாவரு மிரைவிதானும்
மாறின வசந்தன்சேனை நின்றது மலரவன்பால்
கூறின னனுமன் வாங்கிக்கொண்டான் குறிசில்தானும்
ஆறியபரத்து வாசனணி மலர்ச்சோலை புக்கான்
வரதனு மனுமன்றனையே வரன்முறை யேவலொடும்
பரதனை யெரியுகாமற் பண்ணியே மீண்டபின்பு
எரிமணி விமானத்தேரி யாவரு மிளயகோவும்
அரிமலர்க் குழலினாளும் ராமனு மையோத்திசேர்ந்தார்

ஆரியணை யனுமன்றாங்க வங்கத னுடைவாளேந்தப்
பரதன் வெண்குடை கவிழ்க்க விருவருங் கவரிவீச
விரைசெறி குழலியோங்க வெண்ணையூர்ச் சடையன்றங்கள்
மரபுளோர் கொடுக்கவாங்கி வதிட்டனே புனைந்தான்மௌலி.

**முற்றுப் பெற்றது.**

௭

# கிட்கிந்தா காண்டம்

## வாலிவதையும் மோட்சமும்

அவ்விடத்தில் ராமனி நின்று அழைத்துவாலி யானவனை
தெவ்வடங்கப் போரையும்நீ செய்யு மெனவுரைத்தான்
சத்துருவைச் செயிக்கத் தான்வந் தடைந்ததம்பி
ஒத்துமேபோர் நீசெய் யுடனே யெனவுரைத்தான்
வார்த்தை நல்லதென்று வானிலங்குந் தேர்மகனும்
நீர்த்தரங்க வேலையஞ்ச நீலமேகம் நாணிடவும்
வேர்த்துமே மண்ணோரும் விண்ணோரு மேநடுங்க
ஆர்த்ததொரு வோசை யண்டமுற்று முண்டதுவே
சத்தத்துட னிடியுந் தான்சேர்ந் தொலிப்பதுபோல்
கத்து கடலேழும் கணடஞ்சி நின்றதுவே
நின்றுகதி ரோன்மகனும் நேமமுடன் கூவியது
அன்றுறங்கும் வாலிசெவிக் கடைந்ததுகா ணம்மானாய்
தன்னிளவல் சத்த மெனவே தெளிந்துணர்ந்து
மின்பரவும் வேலான் மிளிர்மனத்தி லேநினைத்தான்
எழுந்தான் விரைவி லெக்கிரியும் வேர்பறிய
விழுந்ததுவே வறையும்வேரோடு மப்போது
கைத்தலத்தைக் கொட்டிக் கதிக்கின்ற வேகமதில்
திக்கயங்க ளெட்டுந் திகைதப்பி நின்றதுவே
உக்கென வேவுரும வும்பர் களுந்திகைத்தார்
நெக்கென்று நின்றகுன்று நெக்குவிட்ட தப்போது
வந்தேன்வந்தேன் னென்றுவாய் திறந்தறற்று மொலி
இந்திரன் முதற்றிசை களெங்குமே கேட்டதுவே
சந்திரனோ டிலங்குந் தாரகையின் கூட்டமெலாம்
சிந்தினமணி முடிகள் சிகரமது தீண்டிடவே
வீசினதோர் காற்றினிட வேகமதால் வெற்பிணங்கள்
தூசியாய்ச் சென்று துலைந்தது வேயப்போது
கூசினனந் தகனுங் குலைகுலைந்து வும்பரொடு
மூலமுதலாய் முளைத்த முதற் கொழுந்தால்
காலமு மொத்த கடலில்க் கடைந்ததொரு
ஆலமுமொத் தவவன் விதியை மாற்றுவரார்
ஆயிடைத் தாரைய வளமிர் தமதிற்றோன் றியவள்

வேயிடைத் தோளாளும் விலக்கிநின்றா ளம்மானாய்
விட்டுவிடு யென்னை விலக்காதே நீயுமிப்போ
கட்டழகன் பின்னோனைக் கசக்கியு யிர்நீத்து
வாரேனெனவே மகிழ்ந்து ரைத்தான் வாலியுமே
காரோதி தாரையுமே கழறுவா ளப்போது
போருக்குத் தோற்றுப் புறங்கொடுத்த வுன்தம்பி
ஆருதுணை யாலோவ வன்வரவு தானாகும்
என்றுமே தாரையெடுத் துரைக்க வாலியுமே
மூன்றுலகி லுள்ளோரும் முன்வந் தெதிர்த்துநின்றால்
பாதிவலியு பலமு மெனக் கென்று
கோதிலாய் நீயுமிதைக் கூறநான் கேட்டிலையோ
மந்தர கிரியையுமே மத்தாக வாசுகியை
அந்தயில் கடைகயிறாய் யாழியிலே நானுமப்போ
சந்திரனைத் தூணாகத் தான்கடைய வேண்டுனற்கு
இந்திரனுந் தேவர்களுமே ங்கித்தவித்தார்கள்
அயர்வுற வுற்றதனை யானறிந்தங் கப்போது
தயிறாய்க் கடைந்ததனைத் தையலேநீ கேட்டிலையோ
கூற்றனுமென்பேர் சொன்னாற் குலைகுலைந்தே யோடிடுவான்
மாற்றலர்க்கு யானே மயங்கிடுவே னென்றுரைத்தான்
பேதையே யெதிற்பவரின் பெருமையு மவற்குரிய
ஊதிய வரங்களு முயர்ந்ததொரு வெற்றியுமே
பாதியுமென்ன தென்றாற் பதைப்பதவ ரெங்ஙனம்மே
நீதுய ரொழிகென்று நேர்மையாய்க் கூறலுற்றான்
அன்னதைக் கேட்டு வரசுவ வளானதினால்
இன்னுயிர் நட்பாயி ராமனமைந் தனையும்
உன்னுயிரைக் கோடல் செயவுடன் பட்டனென்பதையும்
துன்னியதோர் நட்பாளர் சொன்னாரெனக் கென்றாள்
உழைத்த வல்லிருவினைக்கு மூறுகாண் கில்லாத
தழைத்தய ருலகினுக்குத் தான்தரும முள்ளதெல்லாம்
இழைத்தவரைக் காக்குமேந் தலையாநீ மொழிந்தாய்
பிழைத்தனையே நீயுமிப்போ பெண்மையா லென்றுரைத்தான்
இருமையையும் பார்க்கும் யெங்கோன் நினைக்குமோதான்
பெருமையோ வென்னையவன் பேணா திருப்பதுவும்
அருமையாய் வந்தென் முன்னாதர வளிக்குமையன்
தருமோ வென்னைத் தவிற்குமோ வென்றுரைத்தான்
தாய்வாய்மை கேட்டுத் தரணி முழுவதையும்

பெய்வளையாளே யவன் பின்னவனுக்கே யளித்தான்
அன்னவனின் பெருமை யாருரைக்க வல்லார்கள்
என்னேரமு மவனையேற்றித் துதித்திடு நீ
நின்று பேருலகமெலாம் நேர்ந்து நெருக்கிடினும்
வெற்றிதரும் சிலையே வேண்டுமே யல்லாது
வேருதுணைய துக்குவேண்டுமோ வென்றுரைத்தான்
புன்றொழிலைச் செய்யும்புகர் குரங்கிஞேடு நட்பு
மின்பரவுவேலான் விரும்புவதோ வெனறுரைத்தான்
எம்பியும் யானும்மே யெதிற்கின்ற போரினிலே
அம்பைத் தொடுத்திடுமமோ வாயிழையே வென்றுரைத்தான்
இங்கு யிருநீ யிளையவனை யுந்துணையும்
மங்கும்படி செய்து வருவே னுயிர்குடித்து
வேரே மருமுறையும் விளம்பவே வஞ்சிநின்று
தாரையவளுந் தயங்கி நின்று ளம்மானை
எல்லைக் குயப்பாலி ந்திரன் றிசை நோக்கித்
தொல்லைக் கிரியதனிற் ரேன்றிடும் ஞாயிறென
மல்லற் கிரியின்தலை வந்தான் வாலியுமமே
அவ்வேளை ரமன் வநுசன்றனை நோக்கித்
தெவ்வைச் செயிக்கவிடு தேரிரவி தன்மகனை
வள்ளற் கிளையோன் வசனிப் பானப்போது
கொள்ளக் கொடுங்கூற்றைக் கொணர்ந்தான் குரக்கினுட
உள்ளத்தி லூன்றுமுணர்வு நமக்கே னென்றான்
ஆற்ருது பின்னும் பகர்வானற மழுங்கத்
தேற்றுரைத் தேரல்செய்தல் தெளிவு நமக்கெப்போதும்
தன்முன்னைக் கொல்லத் தஞ்சம்வந்தா னம்மிடத்தில்
என்வரவு யிவனை யேந்துதலுமென்றுரைத்தான்
இளையோய் யிதுகேளென் றரியனு மேதுரைப்பான்
பிளையேவிலங்கின் வொழுங்கைப் பேசிடவும் ஞாயமென்ன
எத்தாயர் வயிற்றிற் பிறந்தார்க ளெல்லோரும்
ஒத்தாற் பரதன்பெரிதுத் தமனுயா துண்டோ
என்றுமே சொல்லி யிளையோன் றனைத்தேற்றி
மன்றிறல் சேர்வாலியுடன் மற்பொருத விட்டார்கள்
குன்ருேடு குன்று குருகிப் பிணைப்பதுபோல்
நின்றார் திரிந்தார் நிலமெங்கு மேதிரிந்து
வன்ரேட் குலாலனுட மட்கலத்தின் ஆழியென்ன
தன்ரேள் வலியுடயார் தான்பொருதும் வாரதென்றால்

மின்னிழையார் தன்பொருட்டாய் மேவிச்சமர் விளைத்தார்
ஒருதாய் வயிற்றினுடன் பிறந்த மன்னவர்கள்
ஒருமாது தன்னலுயிர் நீக்கத் தான் துணிந்தார்
காமம் கொலைகளுக்கே காரணமென்றே பெரியோர்
நேமமுடன் கூறியதும் நிட்டூர மாயதுவே
கடலொன்றே டொன்று கணைத்துக்கு முருதல்போல்
திடலொன்றே டொன்று வமர்செய்வ தெனமலைந்தார்
* ஊகங்களி நாயகனும் வொங்கணின் றியுமிழ்ந்தான்
மேகங்களும் கறந்த வெற்பினங்களு மெறிந்த
மாகங்களை நண்ணும் விண்ணவர்கள் போய்மறைந்தார்
அடல்சமரைப் பார்த்து வவ்வளவுந் தானுரைக்கத்
திடமிகுந்த கம்பருமே செப்பமுடியா தென்றால்
கடல்சூழ்ந் திலங்குந் திருக்காசினியி லாருரைப்பார்
இப்படியாக யிவர்க ளிருபேரும்
கைப்பிடியதாய்ப் பிணித்துக் ககனம்வரை போய்வந்து
வண்போர் மிகப்புரிந்து வானிரவி தேர்மகனும்
திண்புயங்கள் தானலுத்துச் சேர்ந்தானிராமனிடம்
உலைந்த தொரு சிந்தையுட னுன்னமது தத்தளித்து
மலைந்து பொருதங்கு வாரவனையும் பார்த்து
குலைந்திடேலுந் தனையுங் குறிப்பறியவில்லையே நான்
கொடிப்பூவை யுன்கழுத்தில் கொற்றவனே நீசூடி
நொடிப்போதில் போவென்று நேமியோன் தானுரைத்தான்
நல்வார்த்தை கேட்டு நடந்திரவி தேர்மகனும்
கொல்லென்று கொக்கரித்துக் கூவிநின்றான் வாலியிடம்
துயங்குகின்ற மார்பன் தொல்திறல் வாலியும்மே
பயங்கொளவே தான்புடைத்துப் பற்றிப் பலகாலும்
அயிர்த்ததொரு சிந்தையனு யந்தகன் குலை குலைய
வயிர்த்த கரமதிலும் வன்காலி ரண்டினிலும்
உயிர்த்தலங் கடோருமுதைத் தேயடித்தானே
கக்கினன் செங்குருதி கண்ணாலும் மூக்காலும்
திக்கையும்மே நோக்கிச் செழுங் * கதிரோன் தன்மகனும்
புக்குமீக் கொண்டு பொருதின * னிந்திரன் சேய்
எடுத்துமே பார்தனிலே யெற்றி யிளவலையும்

---

* ஊகம்களி நாயகன் = வாலி. * இந்திரன் சேய் = வாலி
* கதிரோன் மகன் = சுக்கிரீவன்

மடுத்துமே மீக்கொண்ட வாலிமேற் கோலொன்றை
தொடுத்துமே ராகவனுந் தோளிறுத்துத் தான்றுந்தான்
காருகின்ற வார்சுவையின் கதலிக் கனியதனில்
சேருகின்ற ஆசியதும் சென்ற நின்ற தென்செப்பின்
அண்டர்கோன் பாணமதையவன் கரத்தால் பற்றியதால்
உண்டோ தானேழேழு முலகினுலு வொப்புரைக்க
திண்டி றவ்வாலி திறலையும்மே சொல்லரிதால்
அலங்குகின்ற தோள்வலியு மற்றேதான் வாலியும்மே
விலங்கின மேருவும்மே வேர்பறிந்ததாய் வீழ்ந்தான்
சையமது வேரோடு தான் வீழ்ந்தது போல
வையமதிற் கிடந்த வாலியின் கரமிரண்டும்
ஐயன் கணையை யழுத்த விடாதே பிடித்து
கைநெகிழ விட்டான் கதிரோன் மகன்றனையும்
பற்றிப் பிடித்ததொரு பாணமதைக் கால்வால்கை
எற்றி யிழுப்பதைப் பார்த்தியமனுங் குலைகுலைந்தான்
எழுந்து மேவானி வட்டையிடிப்ப லெனவிவரும்
விழுந்துமே பாரிடையை வேரோடும் வீழ்ப்பனென்றும்
அழுந்துகின்ற யிச்சரத்தை யார்தான் விடுத்ததென்றும்
சுற்றுமே நோக்குஞ் சுடுசரத்தைக் கரத்தால்
பற்றிவால் காலினும்மே படுவலியாலும் பார்த்து
தேவனோ வென்றயிற்குந் தேவருமிச் செயல்கள்
ஆவனோவென்று யயிர்த்துப் புரண்டு ருளும்
நேமி யோதானோ நீலகண்டன் சூலமதோ
நாம வேலிந்திரனின் நல்வச்சிரப் படையோ
ஆமிதோ வென்றயிற்கு மதுவும்மேயல்லவெனில்
தாரகனைச் சையமொடு தான்றுளைத்தவேலதுவோ
பாரனைத்து மென்மேற் படைதொடுக்க நாணிடுமே
என்றயிற்துப் படையையார் நாம மென்றறிய
நின்று நிலமதிலே நெட்டுயிர்ப் போடும்பார்க்கும்
வாலியுட மார்பதனில் வந்தொழுகுஞ் சோரிகண்டு
கோலமுடன் வீழ்ந்தான் கொடுங்கதிரோன் தன்மகனும்
நேசமுடன் வாலி நிணமொழுகி யேகிடந்தான்
பாசம்விடுமோ வுடனுற் பவித்தம்பி யானதினல்
செம்மை சேர்நாமம் தெரியவே வாலிநினைத்து
மும்மைசா லுலகினுக்கு மூலமந்திரத்தை முற்றும்
இம்மை மறுமைக் கிருமருந்தாய் யிரமனெனும்

செம்மைசேர் நாமமதைக் கண்ணுற் றெறிந்துணர்ந்தான்
இல்லறத்தைத் துறந்து யெம்பியையுங் கைப்பிடித்து
வில்லறத்தைத் துறந்துவிட்டா னென்மார்பகத்தே
சொல்லறந் துறந்திலாத சூரியன் மரபினுக்கே
நல்லறந் துறந்ததென்று நகைவரவே நாணமுற்றான்
இறையுந் திறம்பினனல் லென்னே யிழிந்தோர்போல்
முறையுந் திறம்பினனல் லென்றே மொழிந்தான்முன்
துறைதிறம் பாமறகாற்கத் தோன்றினன் வந்துநின்றான்
கண்ணுற்றான் வாலியும்மே கார்முகிற் கமலனையும்
மண்ணுற்று வில்லேந்தி வந்தாயே நீயுமிப்போ
புண்ணுற்ற சோரியினன் பொறிப்போடுமே நோக்கி
எண்ணுற்றாய் யென்செய்தாய் யென்றுமே யேசலுற்றான்
வாய்மை மரபுங்காத்து மன்னுயிர் துறந்தோனின்
தூயவன் மைந்தா பரதன்முன்பு தோன்றினையே
தீமை பிறரைக்காத்துத்தான் செய்தாற்றீங்கலவோ
தாய்மையும் நட்பும் தருமம் தழுவநின்றாய்
கோவியற்றரும மெல்லாங் குலத்துதித்த பேர்களுக்கே
ஓவியத்தாலும் வரையா வுருவத்தா யுன்னதன்றே
ஆவிக் குறியதொரு வன்னத்தை யமிழ்தின்வந்த
தேவிபிறிந்த பின்பு திகைத்தனையோ நீயுமிப்போ
அறக்கன் அழிவுசெய்து கழியவ வனைவிட்டு
குரக்கின் தலைவனையா கொல்லவும்மே முன்வந்தாய்
இரக்கமெலா மெங்குகுத்தாய் யெப்பிழை யென்பாற்கண்டாய்
பரக்கழிவு நீபூண்டாற் புகழைப் பரிப்பவரார்
மெலியவர்கள் பாலதுவோ வொழுக்கம் விழுப்பமும்மே
வலியவர் மெலிவு செய்தாற்புக ழோவசையலவோ
கூட்டொருவர் வேண்டாமற் கொற்றவனே நீபிரிந்து
* நாட்டோர் கருமமதை நன்றாய்ப் புரிந்தனையே
* காட்டோர் கருமமுற்றாய் கருமமிதன் மேலுளதோ
இறைவவென்னைச் செய்த தீததெனில் யிலங்கையர்கோன்
முறையல செய்ததென்று முனிதியோ முன்னவனே
இருவரும்மே போர்பொருதி இருக்கின்ற நேரமதில்
இருவரும்மே நல்லுற்றால் லொருவர்மேல் பட்சமுடன்
வரிசிலை குழையவும் மேவாயம்பைத் தானெய்தால்

---

நாட்டோர் கருமம் = தயரதனும். காட்டோர்கருமம = வாலியும்.

தருமம் தருமமே சொல்தரும மனதச் சிதைத்தோய்
நூலினி யற்கையையும் நுங்குலத்து முந்தையர்கள்
போல வியற்கையையுஞ் சீலமதும் போற்றவில்லை
வாலியையும் படுத்தாய் மன்னவர்கள் நீதியற
வேலியையும் படுத்தாய் விறல் வீருய் நீயுமின்று
தாரமது மற்ருெருவன் தான்கொளத் தன்கையிருக்கும்
வீரமும் வெஞ்சிலையும் மேவிப் பழிக்குதுனை
நேராக வல்லவும்நீ மறைந்து நிருயுதன்மேல்
மார்பிலக்காய் யெய்வதற்கோ வில்லின் வலிமையதே
என்று பலவாருய் யியம்புமொழி கேட்டு
நின்றதொரு வீரனினய நிகழ்த்தினனே
கொலநினைந்தாய் யும்பியையுங் கொடுந்தொழிலை செய்துகொண்டு
அல்லலுற்றே னபயமென்று மதையு நினைக்காமல்
தொல்லையுற்ருய் நீயுந் துரத்தித் துரத்தியும்மே
தோற்றமென்று சொல்லித் தொழுதுயர்ந் தகையானை
கூற்றமுணக் கொடுப்பே னென்று முனிந்தாய்நீ
நாற்றிசை யுமோடி நலிந்து திரிந்தானே
அன்னதொரு தன்மையறிந்து மருளவில்லை
பின்னவ னென்பதையும் பேணிநீ பார்க்கவில்லை
வன்னிதா னிட்டதொரு வரம்புடைய சாபமதால்
பொன்மலையிற் போகப்புரம் பொழிந்து நின்றுவிட்டாய்
ஈரம்மே யாவதுவுமிற் பிறப்பே யாவதுவும்
வீரம்மே யாவதுவுங் கல்வியின் மெய்நெறியே
வாரம்மே யாவதுவும் மற்ருெருவன்தான் புணரும்
தாரம்மே யாவதுவைத் தாங்குந் தருக்கதுவோ
தருமமே யின்னதெனுந் தன்மையையுமோ ரவில்லை
யிருமையையுந் தெரிந்து யெண்ணவில்லை யெண்ணிநின்ருல்
ஆருமையா யுந்தம்பியா ருயிரின் தேவியையும்
பெருமையும் நீக்கிநீ பேண நினைத்தாயே
ஆதலா லெந்தனுக்கு வாருயிர்த் துணையானுன்
எதிலார் தங்களையு மெளியவர்கள் யாவரையும்
தீதனைத் தீர்ப்பதெந்தன் சிந்தைக் கருத்தென்ருன்
அன்னதைக்கேட்டே வாலியரைய லுற்ருனி ராமனிடம்
முன்னவனே யுங்களுட முரைப்படியே நாங்களல்ல
அய்யனே யுங்களருங் குலக் கற்பினம்போல்
செய்திலனே யெங்களையுந் தேமலற் புங்கவனும்

102897

மணமுமே யில்லைமறை நெறியில் வந்ததோரு
குணமுமே யில்லைகுல மதுக்கு வொத்தனவால்
நிணமதுவு நெய்யும் நிணங்குகின்றவே னுடையாய்
என்னப்புலம்பி யிருக்கின்ற வாலியினுக்
கன்னவனு மப்போத ரைகுவான் வாலியிடம்
* மாடதுவும் பற்றியிடங்கர் வலித்திடவும்
* கோட்டதுவும் பற்றியதோர் கொற்றவனைக் கூவியும்மே
பாடதுவும் பெற்றவிலங்கின் பயத்தலினல்
வீடதுவும் பெற்றவிலங்கும் விலங்காமே
சிந்தையும்மே நல்லறத்தின் சேர்ந்தே வழிந்தொழுகல்
பைந்தொடித் திருவின்பரி வாற்றுவான் வந்தான்
வெந்தொழிலின் மிக்கதிரு வீடுபெற்று யெய்தியதும்
எந்தையுந் தானு மெருவைக் கரசலனே
நூல்சிலந்தி தானுமுதல் நுகறரிய பட்சிவரை
வால்க்குருவி தானும் வன்வீ டடைந்ததுவும
கேட்டிலையோ நீயுங் கிளர்வன் சரிதமெலாம்
இனயதுவே யானலு மெக்குலத்தில் வந்தோற்கு
வினையின் பயனே பயனல் வேறுண்டாமோ ?
என்று சொல்ல ராமன் யெயிறு பொடிபடவே
மென்றுகொண்டு வாலீ விளம்ப லுற்று னம்மானய்
செவ்வியோய் நீயுஞ் செருக்களம்நின் றெய்யாதே
வெவ்விய புளிஞரென விலங்கியே மறைந்துவில்லால்
எவ்விய தென்னவென்று னிலக்குவ னியம்பலுற்றான்
முன்புநின் றம்பிவந்து சரண்புகவுன் முன்னேனைத்
தென்புலத்துக் குய்த்தும் சீர்மகுடம் தான்புனைந்தும்
வின்னகற் கரசாய் வீற்றிருக்கச் செய்வேனென்றார்
அன்பினுருவாகி யடைக்கலம் யானு மென்றால்
என்பதனைக் கருதி மறைந்துநின்று யெய்ததென்றான்
கவிகுலத் தரசுமப்போ கட்டுரையை யுட்கொண்டு
அவியுமனத்தினனு யறத்தை யழியச்செய்யான்
புவியிடை வண்ணலென்ப தெண்ணிப் பொருந்திமுன்னே
செவியுறு கேள்வியுளான் சென்னியை யிரஞ்சிநின்றான்
தாயா யுயிர்களுக்குந் தருமந் தயைசால்பு
நீயாக நின்றநயபி நெறியே தவராதோய்
தீயென பொருத்தியென்றான் சிறியளி சிந்தியாதான்

---

மாடு = பக்கம். கோடு = சங்கு. இடங்கர் = முதலை

குரங்கெனும் நாயடியேன் கூறியதோர் புன்சொலையும்
அரந்தை யென்பிறவி யென்றோற் கருமருந்தனையவையா
வரந்தருவாய் பென்று வணங்கித் துதித்தானே
ஆவியும் போம்பொழுது வரிவையுந் தந்துவிட்டாய்
மூவர்நீ முதல்வநீ முற்றும்நீ மற்றும்நீ
பாவம்நீ தருமம்நீ பகையும்நீ யுறவும்நீ
ஒவியம்மே நாயே னுளது பெருவதுன்பால்
பூவில் * நறவம்மாந் திபுந்தி வேருற்ற போது
தீவினை யியற்றுமேனும் யெம்பிமேற் சீறியென்மேல்
ஏவிய பகழியெனுங் கூற்றினையே யேவலென்றான்
இன்னமொன் றிறப்பதுண்டா லெம்பியையு மும்பியர்கள்
* தன்முனைக் கொல்வித்தானென வேதடுத் திதக்கோய்
மற்றில னென்னினும்மே வறக்கனை வாலிற்பற்றி
கொற்றவனே நின்னிடத்திற் கொடுத்தென் தொழில்காட்ட
பெற்றிலேனிப் போதுகடந்த சொல்லி லென்னபயன்
உற்றது செய்யென்று றுறியனனும மனென்றான்
அனுமனென்று சொல்பவனை வையநின் செய்யசெங்கைத்
தனுவென நினைதிமற்றென் தம்பியை நின்றம்பியென்று
நினைதியே லென்றங்கு நேமியானுக் குறைத்தான்
என்னவே யித்தலைகைய தெல்லா மியம்பிநின்று
பின்னவற் கியம்பிநின்ற பேரெழிலாளனை நோக்கி
உன்னடைக் கலமென்று முச்சிகரம் வைத்தானே
வைத்தபி னுருமைத்தம்பி மாமுகத்தை நோக்கியப்போ
உய்த்தனை கொணர்தியுந்த னேங்கரு மகனையென
அப்போது சென்றங் கழைத்திடவும் மங்கதனும்
செப்பவந்து கண்டான் றிருத்தாதை தன்னையும்மே
மண்டல முலகமதிற் கிடந்த மதியமதாய்
விண்டலந்தன்னில் நின்று மீன்வீழ்ந்தென வீழ்ந்தான்
எந்தையே யெந்தையே யென்னுனக்கு வந்ததென்று
சிந்தையால் வேறுமொரு தீமையும்மே செய்யாதோய்
நொந்தனை தானிற்க வுன்முகத்தைக் கூற்றனும்மே
வந்ததோ வன்றோ யார்தான் வலிதீற்பார்
அடியாற் கழிவுசெய்த வசுரனுங் கேள்வியுற்றால்
நெடியவால் போச்சுதென்றால் நெஞ்சிற் பயம்போச்சே
அலைகடல் கடைவதென்று லாரினிக் கடைவரையா

---

நறவம் = கள். தன்முனை = வாலியை

மலைபோ லுருண்டலரும் மைந்தனையும் வாலியுந்தான்
குலமகனே யுந்தனுட கொடுங்கவலையை யொழிநீ
நலமுடனே ராமன்வந்து நற்பதவியும் கொடுத்தான்
தன்றுணைத் தடக்கையினாற் றனையனையுமே தழுவி
குன்றினு முயாந்த திண்டோட்க் குரக்கின் றலைவனுமே
பொய்யுடை யுள்ளத்தாற்குப் புலப்படாப் புலவனேயுன்
கையடை யாகுமென்று விராமனிடங் காட்டினனே
தன்னடி தாழ்தலுடன் தாமரைக் கண்ணனும்
பொன்னுடை வாளைநீட்டி நீயிது பெருகென்றான்
என்னவு மேழுலகு மேத்தித் துதித்ததுவே
அன்னிலையறிந்து வாலியுயி ரண்டர்லோகம் சென்றதுவே
கைநெகிழ விட்டான் கடுங்கணையை வாலியும்மே
சையம் குடைபிடித்த தாமன் கணையதுவும்
வெய்யமார் பகத்தைவிட்டு மேக்குயர மீப்போகி
துய்யநீர்க் கடல்மூழ்கிச் சோதி சொலித்திலங்க
அய்யனுட * வாவம்வந்து வப்போ தடைந்ததுவே

---

* ஆவம் = அம்புறாத்தூணி

**முற்றுப் பெற்றது.**

# சுந்தர காண்டம்

## உருக்காட்டுப் படலம்

காண்பதற்கு வொத்ததொரு கால மிதுவாகும்
தூண்டுதற்கு வொத்ததொரு தோகைநல்லார் துஞ்சவில்லை
வேண்டவே துஞ்சுதற்கு வேறோர் வினைசெய்தான்
மாண்டவரைப் போல மயங்கி விழுந்தார்கள்
துஞ்சா திருந்தோருந் துஞ்சுதலை யும்பார்த்தாள்
நெஞ்சினு லொன்றும் நேர்வழியே காணுதாள்
அஞ்சாமல் நின்ருள் பலநா ளழிவுற்ருள்
எஞ்சா வன்பாலி னின்னபகர்ந் தாங்குற்ருள்
காரஞ்சு மேனிக் கருணைகரனை நினைந்து
நீர்விழியிற் ருெழுக நினைந்து நினைந்துருகி
கார்த்திகைக்குங் கோதைநல்லாள் கரையொன்றுங் காணுமல்
பொறையாயி ருந்துகொண்டு பொன்ரு துயிர்காத்தேன்
அரையிருங் கழலவறைக் காணுகின்ற வாசையினுல்
நிரையிருந் தேன்பலநாள் நிருதருடணீண் நகரில்ச்
சிறையிருந்த வென்னைப் புனிதமது தீண்டுமோதான்
பிரர்மனை யெய்தியதோர் பெண்ணையே தீண்டுவது
திரனல வென்றனுயிர் தேவும் நினைத்ததுவோ
வஞ்சனை மானின்பின் மன்னையும்மே போக்கிவிட்டேன்
மஞ்சனை வைதுபின்னும் வழிக்கொள யேகிவிட்டேன்
துஞ்சா திருந்துவிட்டேன் தொல்லுலகு மேபழிக்க
ஆதலினு லெனறத் தினுழுங் கதனுல்
சாதல்காப் பவருமென்ற வமதனுற் றுஞ்சினர்கள்
ஈதலால் வேரிடமு மில்லையென கினைந்து
பேதுலா மாதவியாள் பொதும்பரிடம் வந்துநின்ருள்
கண்டா னனுமனும்மே கருத்துமுற்று மெண்ணியும்மே
கொண்டா றுணுக்கமுடன் மெய்தீண்டக்கூசிடுவான்
அண்டர் நாயகனி னருட்டூத னுனென்று
தொண்டைவாய் மயிலினையுந் தொழுதுகொண்டு நின்ருனே
அடைந்தே னடியேனி ராமனுட வாணையினுல்
மடந்தை நின்சேவடியை வந்துவணங்கி நின்றேன்
இவ்விடத்தில் நீயுமிருந் ததனைத் துன்பமுரும்

அவ்விடத்தி லிருக்கும் வண்ணல் வறியாததுதான்
வெவ்விடத்துக் கொப்பான வேலரக்கன் வேறோடும்
தெவ்வடக்கி மாளச் செய்யும்நாள் வந்திலவே
அய்புரலே யுனது வாரியனுரைத் திடுஞ்சொல்
மெய்யா யுரைத்திடுஞ் சொல்வேரு மிருக்கிறதால்
கையிலுரும் நெல்லிக் கனியதுபோற் காண்பீரால்
நெய்யுருகுந் தீபமுளாய் நீயும்பின் காண்டியென்றான்
நின்றவனை நோக்கி நிருதனென வையமுற்று
வென்றனனே வைம்பொறியும் விண்ணவனே வேறவனே
நன்றுணர்வு ரையான்தூய நவையிலா தவனென்று
இரக்கமுடன் வந்திங்கு யெம்பிரான் நாமம்புகன்றான்
உருக்கியுணர் வுதந்தானு யிரினுதவி யுண்டோ ?
நினைவுடைய சொற்கள்கற்று நிலம்புகப் புலம்பநின்றான்
வினவுதற்குரிய தொருவீரன் ணீயாவ னென்றாள்
ஆயவன்சொற் கொண்டவன்னையே நின்னையும்மே
தூயவன் பிரிந்தபின்பு தேடிய துணைவனுளன்
காய்கதிரின் செல்வன் கவிக்குலத்து நாயகனும்
நாயகன்பேர் சுக்கிரீவ னென்று நவின்றனனே
மற்றவனின் முன்னேன் ராவணனை வால்தனிலே
இற்றுகவே கட்டியெண் டிசையெலாம் பாய்ந்தான்
வெற்றியென்று தேவர்வேண்ட வேலையை விலங்கன்மத்தால்
சுற்று நாகந்தேய வமிர்தங்கடை தோளான்
அன்னவன் றன்னையுங் கோனம்பா லுயிர் போக்கி
பின்னவற்கு மாமகுடம் பெருமையுரச் சூடியம்
மன்னவற்கு நாயேன் மந்திரியா யுள்ளேனே
நன்னெடுங் கால்மைந்த னுமமது னென்றான்
துப்புறுபரவை யேழுஞ் சூழ்ந்த பாரேழுடனே
ஒப்பிலா நாகர்நாடு மும்பரினிம் பர்காறும்
அப்புரமுந் தேடி யலைந்தோமே தாயேயுன்னை
எப்புரமுங் காணமல் யேங்கித் திளைத்தோமே
புன்றொழிலைச் செய்யும் புகறறக்கன் போந்ததினம்
குன்றினிலே யிட்ட வணிகலத்தின் கொள்கையினல்
தென்றிசையே சேறியென்று னவனருளுஞ் சிந்துவதோ
இற்றை நாளளவுமே தானழிந்துமே நீத்த
மற்றை நல்லணிகா ணுன் மங்கலத்தைக் காத்ததுவே
மேயிடைப் படர்ந்து தீரவெள்ள மிரண்டோடும்

பாய்புனலி லங்கைமூதூர்க் கென்றனன் பழிவென்றான்
உய்த்தல் வந்துற்றதோ வென்றருவி நீரொழுகுகண்ணாள்
அய்ய சொல்வையன் மேனியெப்படிக் கரிதிமயன்றாள்
கடல்சூழி லங்கையினிற் கண்ணெழுகுந் தாயேகேள்
அடிமிசைமுடி காறுமனுமன் மொழிந்தானே
வள்ளிவார் காதாளே வழுத்திடுவே னையோத்திவிட்டு
வள்ளனூடனே வருகின்ற போதினிலே
கிள்ளையொடு பூவையையுங் கிளிமொழியே நீநின்று
சள்ளையுரு மற்பார்க்கச் சாற்பியசொல் சொல்லென்றார்
திட்டியது தீட்டரிய செய்கையது போதுமென்றாள்
காட்டினனே ராழிதனை வாணுதலி கண்டாளே
இரந்தவர்கள் பிறந்த பயனெய்தினனே யென்றுசொல்வாள்
துரந்தவுயிர் வந்ததுகொல் தூயவளின் செய்கையப்போ
இழந்தமணி புற்றறவு மெயிர்த்த தெனலானாளே
பழந்தனமிழந் தனபடைத்தவரை யொத்தாளே
குழந்தையை யுயிர்த்த மலடிக்குவமை கொண்டாளே
உழந்து விழிபெற்ற தொருயிற் பொறையுமானாளே
வாங்கிமுலைக் குகையில் வைத்தாள் தடந்தோளில்
தாங்கினன் மலர்க்கண் மிசையொத்தினள் தடந்தோள்
வீங்கினள் மெலிந்தாள் குளிர்ந்தாள் வெதுப்போடும்
ஏங்கினளுயிர்த் தாளின்னதெனச் சொல்லரிதால்
ஆண்டகை தன்மோதிரம்மோ வடுத்த பொருளதெலாம்
தீண்டளவில் வேதிகைசெய் தெய்வமணி யென்றாள்
விருந்துமென லாகியதுவீயு முயிர் மீளுதற்கோர்
மருந்துமென லாகியது வாழிமணி யாழியுந்தான்
மீண்டுறை விளம்ப லுற்றாள் விழுமிய குணத்தோய்நீ
ஆண்டையா யிளவலோடு யெவ்வழி யிலெய்தியது
தூண்டற நிவண்றேளா னுற்றதனைச் சொல்லலுற்றான்
உழைக்குலத் தியமாயவுருவு கொண்டுலைதல் செய்தான்
மழை நிறத்து மாயமா ரீசனென் போனும்
இழைதட மார்பத்தண்ணல் லெய்யப் போய்வை யஞ்சேர்வான்
அழைத்த தவ்வோசை யுன்னை மயக்குதற் கரக்கனென்றான்
இக்குரல் யிளவல்கேளா தொழிகென யிறைவனிட்டான்
கைக்குரல் வரிவில்லானு மிளையவன் வாவுகண்டான்
கண்டவுடன் வீரன் முகத்தாற் கருத்தோற்ந்தான்
புண்டரீகக் கண்ணை னுமுற்றதனையுங் கேட்டான்

வண்டுறையுஞ் சாலைவந்தா னின்னை யங்குகாணாமல்
உண்டுயிருழந்தான் பினுழப்பதற்கு யேதுவுண்டே
அன்னிலையாய வண்ணலாண்டு நின்றனன் நின்னைத்
துன்னிருங்கான் யாறுமலைகளுமே போய்த் தேடி
இன்னுயிரின்றியே குமியந்திரப் படிவ மொத்தான்
தன்னுயிர் புகழ்க்குக்விற்ற சடாயுவையும் வந்துகண்டான்
எந்தையேநீ யவதியுற்ற தன்மை சொல்லுகென
சுந்தரி நின்னைச் செய்த வஞ்சனையும் சொல்லிடவே
வெந்தது போ லுலகம் நிமிர்ந்தது சீற்றவெந்தீ
சீறியே மூன்றுலகுந் தீந்துகச் சினவாயம்பால்
நாருவே னென்றுகைவில் நோக்கிய காலைதனில்
ஊரிலொரு சிறியே னொருதவறு தான்புரிந்தால்
பாரினுயர் பெரியோய்பல் சமயம் போற்றுதனை
சீரிய கோபமதைச் சீக்கிரத்தில்த் தானடக்கி
ஆருதி யென்றுதாதை வறையலுற்ற தைக்கேட்டு
எவ்வழி யேகியுற்று னவனினுறை யுள்யாது
செவ்வியோய் கூருகென செப்புவான் தாதையுமமே
இவ்வழியே யேகிவிட்டான் ராவண னென்றுசொல்லி
மெவ்விய விதியின்கோட்பால் வீடினன் கழுகின்வேந்தன்
எவ்விடும் வரிவில்லார்கள் யிடரதனில் வீழ்ந்தார்கள்
அயர்ந்தவர்கள பிறிற்றேறி யாண்டெழிற் றுதைதனக்கு
செய்த்தகு கடன்கள்ளெலாஞ் செய்தே முடிந்தபின்பு
கயத்தொழி லறக்கன்றனைக் காண்பதற்கு தேடியுற்றோம்
புயற்றொடு குடுமிக்குன்றுங் கானமுங் கடிதுபோனோம்
அவிடம் நினைக்காண தயர்ந்துவரி திற்றேறி
செவ்விழி நயனஞ்சேர்ந்து நெடுவழியே சேறுசெய்ய
வெவ்வழலுற்ற மெழுகா யுருகி நின்றோம்
இவ்வழி யினையசொல்லி வறிவழிந் திரங்கலுற்றான்
அன்பின னிவ்வுரையு மங்கு புகன்றிடவும்
என்புற வுருகியே யவளிரங்கி யேங்கினளே
துன்பமு முவகையும்மே சூழ்ந்துகொண்ட நெஞ்சமுள்ளாள்
அய்ய நீளளப்ருமளக்கர் தனைநீந்தினையே
எய்திய தெப்பரிசி யம்புவாயென்றுரைத்தாள்
இத்துணைச் சிரியதொரு வெண்ணுகின்ற வாக்கையினால்
தத்தினை கடலினையேதான் தவத்தினை யதோசொல்
சித்தியி னியன்றதோ நீசெப்புவா யென்றுரைத்தான்

முத்தினு நிலவினும்மே முறுவல்முற்று வாளுமப்போ
சுற்றியே நின்றனனே தொழுதுயர்ந்த கையினனாய்
விட்டுயர் தோளினனே விசும்பதனின்மேலுமுளான்
எட்டரு நெடுமுகட்டை யெய்தியே நின்றனனே
முட்டுமென் றுருவெடுத்து வளர்ந்ததொரு மூர்த்தியினன்
அண்டமென் றதினுரையும மரர்கள் யாரையுமமே
கண்டனன் றன்னுடைய கமலமலர்க் கண்ணிலே
எழுந்துயர் நெடுந்தகையி னிணையிலா பாதமும்மே
அழுந்துய ரழுத்தவும் மேயிலங்கையி னாழ்கடலும்
விழுந்தது நிலமிசையில் விரிந்ததொரு தெண்டிரையும்
தழைந்தது புரண்டதுமே மீனமது தானதெலாம்
வஞ்சியல் மருங்குடைய மாவறிய கற்பினளும்
கஞ்சமு மொத்ததொரு கழலிணையைக் காணனே
துஞ்சின ரரக்கரென்று வக்குகின்ற சூழ்ச்சியுளாள்
அஞ்சினே னிவ்வுருவை வடக்குவா என்றுரைத்தாள்
முழுவது மிவ்வுருவைக் காண முடியாதேன்
எழுவினு முயர்ந்ததொரு ராமனுட தோள்களையே
தளிவின வளரமென வேதளிற்குந் தகைமையுளாள்
உன்ன நின்றியானு யொழிந்தேனு யிருகுத்தேன்
என்னவர் நிருதரிவர் யெங்கோன் துணையென்றால்
என்றுமே சொல்லி யிரைஞ்சித் தொழுதுநின்றாள்
சென்றே றனுமான் திருவடியைத் தான்தொழுது
வெள்ள மெழுபத்துளதால் வீரனுட சேனையும்மே
பள்ளமொரு கைநீரள்ளிக் குடிக்கவும்மே போதாது
கள்ள வரக்கன் கடியிலங்கை யிப்போது
தெள்ளு பொடியாய்ச் சிந்துவதும் பார்த்திடுவாய்
என்றுசொல்லி யனுமானி ரஞ்சிநின்றான் சேவடியை
நன்றுசொல்லிப் பிருட்டியுட னிளமலர்ப் பதத்தை

---

**உருக்காட்டுப் படலம் முற்றிற்று.**

# சுந்தர காண்டம்.

## சூளாமணிப் படலம்.

அண்டமுதல் நாயகனின் யாவியனை யானே
கொண்டகல்வதே கருமமென் றனுமன் முனிணைந்தான்
விட்டி லிலாமல் வெயிலிலிட்ட தீபமுளோய்
ஈட்டியினி யென்பலது பிராமனிடம நின்னைவிட்டுக்
காட்டியடி தாழ்வேன் காண்டியிது காலம்
பொன்றினி பொலன் குழையே யின்றனிடர் களைந்து
துன்றிய புயத்தினி திருந்துன் துயரைவிட்டு
குன்றி னிடையேயுனையுங் கொண்டு குதிப்பேனென்றான்
அறிந்து வறக்கர்கள் வந்தடற் பார்களானுலும்
முறிந்து வெதிர்சிறி முடிப்பேன் சினமதனை
நெறிந்தகுழல் நின்னிலமை கண்டும் நெடியவன்பால்
வெறுங்கை பெயரேன் நான்வேறொருவறல் விளியேன்
அருந்ததி யுனைவணங்கு மன்னேயே நீர்கேளும்
பொருந்த விவடம் வந்தபுயங்கள் புண்படா திருந்தால்
இருக்குமதில் சூழிலங்கை யிமைப் பிலரக்கரொடு
உருக்கி யுயிர்குடித்து யொல்லையினில் மீண்டிடுவேன்
ஆருதுயரஞ் சொலிள வஞ்சியே யென்றோளில்
ஏருகடி தென் றனுமணிணை யடியிரஞ்சி நின்றான்
தீண்டாத கற்புடயசெழுந்திருவு மேதுரைத்தாள்
தீண்டுவ தென்னினும் மேயித்தனை நாட்சேண்பகனும்
மீண்டு மேயுயிர் மெய்யிமைப் பினதுமுனமே
மாண்டுதீர்வோ மென்றே மானிலத்தை வண்மையினுல்
கீண்டுமே கொண்டகன்றான் கீழ்மையுள வறக்கன்
மேவுகின்ற சிந்தையுள்ள மாதரையும் மெய் தொட்டால்
தேவுவன் தலையதுவுஞ் சிந்துமென வயனுல்
சாவமுள வதனுற்றந்ததென தாருயிரை
அன்னதொரு சாபமுள தெனவே வாண்மையுளாள்
மின்னும் மௌலியுளான் மெய்மையுள விடணனின்
கன்னி யென்பால்வைத்த கருணையினுற்று னுரைத்தாள்
ஆண்டுமே கின்று வகழ்ந்துகொண்டு வேலறக்கன்
ஈண்டுமே வைத்தானி ளவலியற்றிய வைத்த

நீண்டதொரு சாலையொடு நிலைநின்றதுவையும் பார்
ஆதலாலெனெந்தனுட யாண்டகை மெய்நீண்டலன்றி
நீதலவோ வென்றுரைத்தாள் நீராத் துயருருவாள்
அண்டருட நாயகனின் னருள்த்தேவி தன்தவத்தைக்
கண்டனுமன்றான் துதித்துக் களித்து மகிழ்ந்து நின்றான்
இருளடர்ந்த ஞாலமி ராவணனை யிப்போதே
தெருளுமே நீயுமினிச் சில்பகல் தங்கியிரு
மருளுகின்ற மன்னவற்கு யான்சொல்லும் வாசகத்தை
அருளுவாய் யென்றே யடியிறைஞ்சி நின்றானே
இன்னுமொரு திங்களிருந் திடுவேன் நானுமேதான்
பின்னையும்மே யாவி பிரிந்திடுமே நீபகர்வாய்
மன்னனுட வாணையிதனை மனக்கொளென்றாள்
ஆரந்தாழ் திருமார்பற் கமைந்ததொரு தேவியென்று
ஈரமனம தனிலில்லையே யென்றாலும்
வீரமது காத்தலைபும் வேண்டுமென்று சொல்லிடுவாய்
காத்த யிளையவற்கென் கட்டுரையைக் கூரவருர்
கோத்த சிறையெனக் குவிடென்று கூறிடுவாய்
திங்களொன்றில் வந்தவரும் சேரத் தவறிவிட்டால்
கங்கையாற்றி லெனக்குக் கடனதுவுஞ் செய்திடச்சொல்
சிறந்தமாமி மூவருக்கும் செப்புவ தென்னவெனில்
இறந்திலள் சீதை தொழுதாளென வுரைப்பீர்
அறத்தினுட நாயகற்கு மருளதுவு மில்லாமல்
மறக்குமே யானும் மறவாமல் நீமொழிவாய்
வந்தெனைக் கரம்பிடித்தவன் சனகர் கோனகரில்
இந்தப் பிறவியினி லிருமாதரை யானும்
சிந்தையிலுந் தீண்டேனெனச் சொல்லிய வரமும்
தந்ததொரு வார்த்தைதான் செவியில் சாற்றிடுவாய்
ஈங்கு நாளிங்கிருந்து வின்னுயிர்போய் மாண்டாலும்
மீண்டுவந்து பிறந்து மிளிர்மெய் முழுவதையும்
தீண்டவரம் வேண்டுமென்று செப்பினுளென வுரைப்பாய்
எந்தை முதலாய யிளைஞர்கள் யாவருக்கும்
வந்தனை யென்று வணங்கி மகிழ்ந்துரைப்பாய்
சுந்தரத் தோளான் தொல்கவியின் மன்னனையும்
அந்தமுள நகற்குவர சாக்கச் சொல்லிடுவாய்
சொன்னதொரு வார்த்தையெலாந் தூயோனுந் தான்கேட்டு
இன்னகரு மிவ்வாசு மெவ்விதமாய்ப் போகுதென்று

மின்னிழையே சில்பொழுதில் மிகவும் மறந்திடுவாய்
என்றொரு திங்கள்நீ யிவ்விடத்தில் வைத்ததனை
வேண்டுவதன்று நான் விரைவிற்போய் வீரனையும்
காண்டலே குறைவுயின் காலமும் வெறுளதோ
ஆண்டகை தானினியோர் பொழுததுவு மாற்றிடுமோ
நீர்த்தங் கவிக்குலத்து யிறையுமேதான் தெரிந்தரல்
வார்த்தைகேட்டு வப்பதன்முன் மாகடலை யோர்சமமாய்
தூர்த்ததனைத யிலங்கை யென்றுலகோர் செல்வதையும்
காத்திருந்து கேட்டுக் களித்திடுவா யம்மணிநீ
எண்ணரும பெரும்படையை நாளையே யின்னகரில்
கண்ணணையு மென்றேடு நீயெளிதிற் காண்டியென்றான்
என்றுபலவா றனுமானி யம்பு மொழிகேட்டு
நின்றதொரு சீதையுட நெஞ்சங் குளிர்ந்ததுவே
என்னுருயிற்கிளிக்கு யார்நாம மீவதென்று
மன்னு வெனக்கேட்க மாசறுவென் மன்னவரும்
தன்னன்னை பேரைச் சாற்றிட வேணுமென்று
சொன்னதொரு மெய்மொழியைச் சொல்லுதீர்
[மெய்தொடர்ந்தோய்
என்றுரைத் தாளித்தகைய பேரடையா ளமதை
தன்றிருத் துயிலதனிற்றன் பொலிவுற்ற தொரு
வன்கதிரின் மாமணியை வாள்விழியாள் தானெடுத்தாள்
வென்றதுவே வச்சுடர்தான் மேலேழுங் கீழேழும்
வாங்கினள் தன்மலற்கை வல்லனு மனப்பொழுது
ஏங்கின னவனுமென் கொலிது வென்றெண்ணி
வீங்கினன் வியந்தா னுலகேழு முள்ளோருந்
தூங்கா திருந்தார் சுடரெங்குஞ் சுற்றியதே
காந்துவதைக் காட்டினளே மாருதியுங் கண்டானே
சூடையின் மணிகள்மணி யொப்பன வென்றாள்
ஆடையின் கண்ணிருந்த ததுபோ லடையாளம
நாடிவந்த தின்னுயிரும் நல்கியதே * நம்பா
கோடியென்று கொடுத்தாள் மெய்ப்புகழைக் கொண்டவனும்
தொழுதுமே வாங்கினனே சுற்றியதோர் தூசோடும்
பழுது வராதவகை பந்தனையுஞ் செய்தானே
முழுதும்மே மும்மைவலம் வந்து வடிவணங்க
எழுதறிய பாவையும்மே யேத்தினளேகினனே

* நம்பா = ஆணில் சிரேஷ்டன்

# சுந்தரகாண்டம்.

## திருவடி தொழுத படலம்.

### வசனம்.

அதற்கப்பால் அனுமான் அசோகவனத்தை அழித்து வந்தெதிர்த்த கிங்கரரை வதைத்துச் சம்புமாலியைச் சிதைத்து, பஞ்சசேனாபதியை மடித்து அட்சய குமாரனைக் கொன்று, நாக பாசத்தால் கட்டுண்டு விடுபட்டு இலங்கையை அழலுக்கிரையாக்கி மீட்டுவந்து ஸ்ரீ ராமபிரான் திருவடியைத் தொழுது நடந்த விபரங்கூறுதல்.

### அம்மானை.

நீங்குவேன் விரைவிலென்று நினைத்து வனுமனும்மே
தாங்கரு குடுமிக்குன்றைத் தானடை தருக்கன்றேப்பான்
வீங்கின நண்டமெல்லாம் விழுங்கினனென்னவுமன்
பூங்கழல் தொழுது வாழ்த்திப் போனான் விசும்போடும்
* மைநாகமென நின்ற குன்றை மாவெய்தி
* கைநாகமனை போனுமுற்ற துணர்த்து வன்கால்
* பைநாகம் நிற்கும் வீரர் தன்னை யெதிர்பார்க்குங்
* கொய்நாகம் தேன் சிந்துங்குன்றினிடைக் குதித்தான்
போய்வருங் கருமமுற்றிற்றென்ப தோருவகை பொங்க
வாய்வெறி நின்ற வெற்றி வானரவீரர் யாவும்
தாய்வரக்கண்ட பார்ப்பு தன்னையொத்து நின்றார்கள்
அழுதனர் சிலவருமாய் யார்த்தனர் சிலவருமாய்
முழுதுற விழுங்குபர்போல் மொய்த்தனர் சிலவருமாய்
தென்கிழங்கு காயுமறி தெனவரி திற்நேடி
மேன்முறை வைத்தேவண்ணல் நுகருதியினைப் பாரீர்
மானவாள் முகம் நமக்குவுரைத்தது நல்மாற்றமென்று
தானுகர் சாகமெலாம் முறைமுயையே தான்கொடுத்தார்
தாள்களில் மாற்பிற்றோளில் றலையினிற்றடக்கை தம்மில்
வாள்களிற் வேலிற் கோளில் மழையினின் வகுத்த புண்கள்

---

* மைநாகம் = மலை * கைநாகம = யானை * பைநாகம் = சற்பம்
* கொய்நாகம் = புன்னை

நாள்கள் மேலுலகிற்சென்ற வெண்ணென நம்பி கண்ண
ஊழ்கொள நோக்கி நோக்கி வுயிருகவுளைந்து நின்றார்
வாலி காதலனை முந்தை வணங்கினன் மெண்கின் வேந்தை
கால்புறப்பணிந்து பின்னே கடன்முதல் கடவோர்க்கெலாம்
மேலுற வியற்றியாங் கண்யிருந்தோற் கள்ளெல்லோர்க்கும்
ஞாலநாயகன்றேவி சொல்லினள் நன்மை யென்றான்
என்ற லுங்கரங்கள் கூப்பி யிரஞ்சி யெழுந்தார்கள்
சென்ற முதல் வந்தவரை செப்பவடம் சேதியெலாம்
வன்றிறலுறவோய் யென்னச் செப்பினன் மாருதியும்
ஆண்டகை தேவியுட வருந்தவ மகிமை சொல்லி
பூண்டவடையாளங்கைக் கொண்டதும் பெரும்போரில்
நீண்ட வாளரக்கரோடு நிகழ்ந்ததும் நெருப்புச்சிந்தி
மீண்டதும் விளம்பான்றன் வென்றியையுரைப்ப வெட்கி
பொருதமை புண்சொல்லப் போந்தமைவந்த தன்மை
உரைசெறியூர் தீயிட்ட தோங்கிரும்புகையோத
கருதலர் பெருமை தேவிமீளாச் செயல்காட்ட
தெரிதற வுணர்ந்தோம் பின்புமென்ன இனிச்செய்வதென்றார்
எவையுமினிமேலே வெண்ணவும்மே கூடாது
சேவகன் தேவிதனைக்கண்டது நாம் செப்பிநின்று
அவதவ் வண்ணல்வுள்ளம் மருந்துயராற்றல் வேண்டும்
போவது நன்மை யென்று போனார்களப்போது
போயினர் களிப்போடும் புங்கவன் சிலையில் நின்று
யேயின பகழியென்ன யெழுந்து விண்படர்ந்து மேதான்
காய்கதிர்க் கடவுளங்கு உச்சிசென்றடைந்த வேளை
தாயன வீரரும் மோய் மதுவனமதிலிருத்தார்
அங்கதனைநாடி அடைந்ததுவே சேனையெலாம்
கொங்கலர்ந்த தாருய் நின்குரக்குச் சேனையெலாம்
வெங்கதமொழிந்து மிகவும் பசி வாட்டியது
யிங்கிதற்களித்தல் வேண்டுமிறாலுமிழ் பிரசமென்றார்
நன்றெனவவனும் நேர்ந்தான் நரலையும் நடுங்க வார்த்து
சென்று பிரசந்தூங்குந் திருவனமே யேதென்றால்
இந்திரன் வாலிக்கீந்தயிருள்சேர் மதுவனத்தை
தந்திடென வளித்தான் தாவி யொடித்ததுவே
ஒன்றோடொன்று பாய்ந்து வொடித்த வென்பிரசமெலாம்
தின்று தின்று வகைகூர்ந்த தேனுகாளியின் கூட்டை
ஒருவர் தின்னுந்தேனை யொருவர் வாய்க்கொண்டு செல்வர்

ஒருவர் கொள்ளுந்தேனை யொருவர் கொண்டோடிடுவர்
ஒருவர் மேலொருவரேறி யோகையாலு வகைகூர்வார்
இன்னணம் நிகழுங்காலை யெறிவிழித்தெதிர்ந்து சீறி
அன்னெடுஞ் சோலை காப்போர் வானரர் தமைநோக்கி
மன்னெடுங் கதிரோன்மைந்தனாணையை மறுத்து நீங்கள்
என்ன நினைந்தென் செய்கிறீர்றது மதுவனமும்
முனியுமால் மெம்மிறையுமென்று மொழிந்து போந்து
கனியும் மதுவனத்தைக் கட்டழித்திட்டதென்று
நனிதரு கவியின்றனை நன்றெனவே நகைத்து
தனியெம்மாலா காதென வேததிமுகவனுக் குறைத்தார்
கேட்டவன் யாவர் நம்மள் மதுவனங்கேடு சூழ்ந்தார்
காட்டென்றான்ற திமுகனுங்கவினுரு வாலிசேயோர்கள்
யீட்டம் வந்து மதுவனத்தை யிறுத்ததெனவுரைத்தார்
எனவுரைத்தனலிற் பொங்கியெழுந்து யிருகோடி
கனைகழற்சேனை யெலாங்கல்லெனக் கலந்துபுல்ல
புனைமலர்ச் சோலை புக்கான் மதுநுகர்ந்த சேனையெலாம்
அனகனை வாழ்த்தி யோடிவங் கதனடிதாழ்ந்த
இந்திரன் வாலிக்கீந்தயின் சுவைமதுக் கானம்
அந்தரத்தவற்கும் நோக்கல் வறியதாலாணைதனை
சிந்தினீர் கதிரோன்மைந் தன்றிறத்தை யறியாமல்
மந்தரமணைய தோளாய்யிற்ற துன்வாழ்வென்றார்
மதுவனந்தன்னையின்று மாட்டுவித்தீரென்றுரைத்து
கதுமென்றெறிந்தானங்கதன் மேற்கற்பாறை
அதனைப் புறங்கையாலகற்றி யங்கதன்சீறி
ததிமுகன்றன்னையுமே தடக்கையாற்குத் தினனே
வாய்வழி குருதி சோரமலர்க்கையாற்றான் மோதி
போய்மொழி கதிரோன் மகனுக்கெனவ வனைப்போகவிட்டு
தியெழும் வெகுளிபொங்க மற்றவன் சேனையெலாம்
காய்கதிர் பொழியுங்கையால் குத்துதீர்கட்டியென்றான்
பிடித்தனர் கொடி கடம்மாற்பிணித்தனர் முன்னும் பின்னும்
இடித்தாசனியஞ்ச யெறும்வலித்தடக்கை தம்மால்
துடித்தனருடலங்கோரும் சொல்லும் போய் நீருமென்று
படித்தனன் வாலிசேயும் பயத்துடனவரும் போனார்
அலைபுனல் குடயுமாபோல் மதுக்குடைந்தாடித்தத்தம்
கலைவர் கட்கினிய தேனும் கனிகளும் பிறவுந்தந்தே
உலைவுருவருக் தந்தீர்ந்தார்ருபவனத் திருந்தார்கள்

கலைகதிர்க் கடவுளின் கடும் வெயிற்றணிவுபார்த்து
விக்ககஞ் னூதுமீண்ட திருதியாய் விளைந்தவெல்லாம்
அத்தகையறிந்த வேலாமறைந்தனன் யாழியான்மாட்
டித்தலைநிகழ்ந்த வேலாமியம் புதற்கெடுக்துக் கொள்வாம்
சேற்றிளமரைமலர்த்திருவையும் நாம் தேடென்று
காற்றின்மகன் முதலாய்க்கவியினுடசேனையெலாம்
நாற்றிசை மருங்கிலும்மே நாடவிட்டோம் நாமென்று
தேற்றினன் தன்னையும்மே திண்கதிரோன் தன்மகனும்
தண்டலி நெடுந்திசைகள் தானதது முதலாய்
கண்டிலர்கள் மடந்தையை யென்னுமே கட்டுறைகள்
உண்டுயிரகத்தென வுறுக்கமு முள்ளானே
திண்டிரலனுமனையும் சிந்தை தனிற்றுன் நினைத்தான்
ஆரியனருந்துயற் கடலிலே யாழ்ந்தவரும்
சீரியதன்று நம் செய்கையென்று செப்பினனே
பூரிய வெம்பழியும் பொடித்ததாமென்று சொல்லி
சூரியன் கான்முளையே யென்றென்னைச் சொல்லினனே
வெறிக்கருங்குழலியையும் நாடவே போனவர்கள்
மறுத்தி வடங்காணேம் மாண்டாரோவென்று சொல்லி
பிறித்தவற்கு வுற்றது கொலென்னை யெனப்பேசிடுவான்
மாண்டாளவளிவளும் மாண்டதொரு சேதிதனை
மீண்டவற் குரைப்பதுவும் மேலி வென்றென நினைந்து
பூண்டதுயர் கொண்டு பொன்றியே போனாரோ
தேண்டியே நின்னமும்மே தேடியலைகின்றாரோ
மண்டுவமர் தொடங்கி வஞ்சகர்கள் மாய்கையினால்
விண்டலந்தன்னிலும்மே மேவியே விட்டாரோ
தண்டலின் நெடுஞ்சிறையில் தானகப்பட்டாரோ
என்றென்றிடருற்றிருக்கின்ற நேரமதில்
வன்றிறற்ற திமுகனும் வானரவசேன்முன்னே
தன்றலைப் பொழிகின்றதான் குருதிதன்னுடும்
குன்றெனவே பணிந்தான் குவிக்கயிருகையோடும்
விழுந்துநின்றறையகேளின்றேடு மதுவனமும்
அழிந்தது வென்றுவ வனுமுறைத்தானே
வழிந்த குருதியுள்ள வதனமதை நோக்கி
மொழிந்திடுவாய் யார்தான் முனிந்ததென வுரைத்தான்
நீலனுங் குமுதனும்மே நெடியதொரு குனறெனவே
போஒயர்ந்த சாம்பனும் புணரியே வந்ததுபோல்

மேலெழுந்த சேனையுடன் விரைவில்வந்து நம்முடைய
சால்புடைய மதுவனத்தைத் தானழித் தானம்மானுப்
தகைந்தவச்சேனை தனைத் தான்தடுத்தேன் நின்னையும்மே
இகழ்ந்துரைத்தான் வாலிசேய்யது வெனக்குத் தாழாமல்
புகைந்தவொரு பாறைபுணர்ப்பா லெறிந்தேனே
இமைத்தன்முன் வாலிசேய்யெழில் சேரும்வாக்கைதனை
சமைத்தியோ வென்றவனுந் தடக்கையாற்றட்டிவிட்டு
குமைத்துவுயிர் பதைப்பக்கூறு நீ போவென்றான்
எம்பலோடே யெழுந்துயிரவியின் கான்முளையும்
பாம்பணையமலன் றனைவணங்கிப் னபங்கொடியின்
மேம்படு கற்புடையளென்று மொருமெய்மைதனைத்
தாம்புகன்றிட்ட இந்தச்சலமென்று வோதினனே
பண்தருங்கிளி மொழியைப்பார்த்த தொருவார் வமதால்
வண்டுறை மதுவனத்தை மாந்திய தெனவுரைத்தான்
புந்திநொந் தென்னயோ கொல்புகலவும் பாலதுவவோ
எந்தையுந்தானிருந்தானிரவி புதல்வனும்மே
நொந்துவந்த ததிமுகனை நோக்கியே கூறலுற்றான்
யார்வனத்தைத் தானிறுத் தாரியம்பு கெனவுரைத்தான்
மாருதியும் சாமபுவன் மயிந்தன் முதற்பதினெழுவர்
*ஆர்கலிநாணவும் மேயயிர்த்த தொரு சேனையுளார்
என்றுரைத்த ததிமுகனை யிரவி சேய்தான் பார்த்து
வன்றிறல் வாலிசேயும் வல்லரசானதினால்
ஒன்றும் நீயுணரவில்லை யுருதியும்மே வேண்டுமெனில்
சென்றுவ வனைச்சரண் சேரு நீ யென்றுரைத்தான்
வணங்கியதோர் சென்னியனாய் வந்தானே யங்கதன்முன்
போழ்ந்துமே யான்செய்த குற்றம் பொருவென்று
வீழ்ந்தானடி யின்மிசை வீழவும் வாலியின்சேய்
தாழ்ந்து கைப்பற்றி யெய்தழுவின னங்கதனும்
சூழ்ந்ததும் பொருக்கென்று முகமனுங் கூறினனே
வன்றிறற் சூரசினுமே வன்முனிவு ஆறியபோல்
வென்றிகொள் கதிர்ச்சூரன் வெம்மை தணிந்ததுவே
என்றுகொண்டி யாவரும்மே யெழுந்துமே போகலுற்றா
எய்தினனனுமனும்மே யெய்திடும்மே யெந்தலையும்
மொய்கழல் தொழாமலே முளரியும்மே நீங்கியதோர்
தய்யலை நோக்கியதோர் தலையவனின் கையினனாய்

---

ஆர்கலி = சமுத்திரம்

வையகந் தழுவநின்று வாழ்த்தியிரஞ்சனுற்ருன்
திண்டிரலவன் செயலைத் தெரியவேதான் நோக்கி
வண்டுமொய்க்குங் குழலாளை வல்லனுமன் கண்டதுவும்
உண்டென்று கர்ப்புமுயர் குறிப்பாற்ருணர்ந்தான்
கண்டனன் கற்பினுக்கு வணியையுங் கண்களதால்
தெண்டிரையலை கடலினி லங்கையுட தென்னகரில்
அண்டருட நாயகனின் அருந்துயர மாருமென்ருன்
உன்பெருந் தேவியெனு முருமைக்கு முளையின்ற
மன்பெரும் மருகியெனும் வாய்மைக்கு மிதிலைமன்னன்
தன்பெருந் தனையையெனும் தகைமைக்குந் தலைமை சான்ருள்
என்பெருந் தெய்வமையாயின்னமுங் கேட்டி யென்பால்
உன்குல முன்னதாக்கி உயர்புகழ்க் கொருத்தியாய
தன்குலந் தன்னதாக்கித் தகவில்யித் தனிமை செய்தான்
வன்குலம் கூற்றுக்கீந்து வானரக் குழுவை வாழ்த்தி
என்குலமெனக்குத் தந்தாளென்ருனனும்மே
விற்பொருதுந் தோளாய் வீங்கு நீரிலங்கை வெற்பின்
நற்பெருந் தவத்தளாய நங்கையைக் கண்டேனல்லேன்
கற்பெனும் பெயர தொன்றுங்களி நடம்புரியக் கண்டேன்
வேலையிலிலங்கையினில் விரிசார்பிலோரிடத்தில்
சோலையினிலேயிருந்தாளும்பி தொடுத்த புல்லின்
சாலையினிற்ருனிருந்தாள் தவஞ்செய்த தையலும்மே
மண்ணெடுங் கொண்ட கன்ருன் வானுயற்கற் பினளின்
புண்ணியமேனி தீண்டவஞ்சுவானுலகம் பூத்த
கண்ணகன் கமலத்தண்ணல் கடியவர முண்டதனுல்
இலங்கை முழுவதுந்தேடி யிராவணனிருக்கையும் போய்
பொலன் குழையவரை யெலாம் பொன்ருது மயக்கிவித்து
கலங்கு தெண்டிரைபோல கண்ணி நீர் கடலிற் கண்டேன்
தையலை யான்வணங்கத் தான் கார்த்திரும்போது
ஐயயானிருந்திடும்போதயில் வெலிலங்கையர் கோன்
எய்தினனிலங்கை வேந்தனிரஞ்சினனிருந்து நங்கை
வெய்துரை சொல்லனும்மே கோரல் மேற்கொண்டுவிட்டான்
அன்னதோர் பொழுதில் நங்கையாருயிர் துரப்பதுவாய்
உன்னினன் கொடியொன்றேந்திக் கொப்பொடுஞ் சுற்றியேதான்
தன் மணிக்கழுத்தினிலே சாத்துகின்ற போதினிலே
பொன்னடி வணங்கிநின்று நின்பேர்புகன்றனனுல்
அஞ்சனவண்ணன் பெயருரைத்தளியை யென்பால்

துஞ்சுறு பொழுதிற்றந்தாய் துறக்கலென்று வந்துநின்ருள்
மஞ்செனவன மென்கொங்கை வழிகின்ற மழைக்கண்ணீருள்
அறிவினிற்றேறிச் சொன்னபேரடையாளம்யாவும்
முறிவற வெண்ணியுந்தான் மோதிரங்காட்டக் கண்டாள்
இருதியினுயிர் தந்தியும் மருந்தொத்ததனை தெந்தாய்
ஒருகணத்திரண்டு கண்டேன் யொளிமணி யாழியைத்தன்
திருமுலைத்தடத்து வைத்தாள் வைத்தலும் செல்வநின்பால்
விரகமென்பதனுல் வந்த வெங்கொழுந் தீயால் வெந்து
உருகியதுடனே யாரிவலித்தது குளிர்ப்புள்ளூற
வாங்கிய தோராழிதனே வஞ்சருர் வந்ததாவென்று
தாங்கரும் மழைக்கண்ணீருல் வாயிரங் கலசமாட்டி
ஏங்கினளிருந்தாளியம்பின ளெய்த்துமேனி
வீங்கினள் மெலிந்தாள் வியந்தாள் வெதுப்புண்டாள்
இங்குள தன்மை யெலாமியையவேதான் கேட்டாள்
அங்குள தன்மையெலாமடியேனிட முறைத்தாள்
திங்களொன்று நானிருப்பேன் றிருவுளந்தீர்ந்தபின்பு
மங்குமுயிரென்றுன் குறைகழல் வணங்கி நின்ருள்
வைத்தது கிலிருந்த மாமணிக் கரசை நல்கி
கைத்தலத்திலீந்தாள் கமலக்கண் தானூற
வித்தககாண்டி யென்று கொடுத்தானே வேதமெல்லாம்
உய்த்துள காலமெலாம் புகழோடு மொக்க நிற்பான்
பொடித்தனவேருமம் பொழிந்ததுவே கண்ணீரும்
துடித்தன மார்புந் தோளும் தோன்றின வியர்வையெங்கும்
மடித்தது மணிவாயாவி போவதும் வருவதுமாய்
துடித்த திருமேனி யெலாயாரவர்துயர் தேர்வார்
ஆண்டையினருக்கன் மைந்தனைய கேளரிவை நம்பால்
காண்டனுக் கெளியனுனும் காலமினித் தாழாமல்
தூண்டிரண்டனைய தோளான் பொருக்கென வெழுந்து
சொல்வான்

எழுகவெம்படை யென்றுன்யே யெனுமளவிலேதான்
பொழிதிரையென வேலைபுடை பரந்து பொங்கியதே
எழுபது வெள்ளத்தானையும்மே தென்றிசை பரந்ததுவே
நீலனையும் பார்த்து நேமியான் தானுரைப்பான் நம்
பால்வரும் சேனைகளைப் பகைஞர் வந்தடராவண்ணம்
சால்புற முன்போந்து சரிநெரிதுருப்போங்கள்
என்றுரைத்தெழும் போது மாருதி யிருகைகூப்பி

புன்றொழிற் குரங்கெனு நாயேன் றோளினிலேறு கொன்றான்
தன்றலை படியுறத்தாழ்ந்தான் வண்ணலும் சரணம் வைத்தான்
வன்றிறல்வாலி சேயுமிளவலை வணங்கிச் சொனனை
நீயினி யென்றோண்மேலேறென நிமலன் சொற்றான்
வாய்புதைத்திறஞ்சி நின்ற வாலி காதலனை நோக்கி
நாயகற்கிளைய கோவும் நன்றென்றவன் றோண்மேல்
பாய்தலும் தகைப்பில் தானைபடர்ந்தது நெறியிற்றானே
கருடனில் விடையிற்றோன்று மிருவரும் போகலுற்றார்
அருடறுமனுமனொனு மங்கதனிவர்கள் தோள்மேல்
பொருள்தறும் வீரர்போக பொங்கொளி விசும்பிற்றங்கும்
தெருள்தரும் புலவர் வாழ்த்திச்சிந்தினர் தெய்வப் பொற்பூ
அன்னெறி நெடிதிற்போக வரிக்குலத்தரசனோடும
நன்னெறிக்குமரர்போக நயந்துடன் புணர்ந்த சேனை
இன்னெடும் பவழக்குன்றிற் பகலெல்லாமிருந்து போந்து
பன்னிரெண்டு நாளதனிற் றென்றிசைப் பரனவபோந்தார்

திருவடி தொழுதபடலம் முற்றுப்பெற்றது !



# உயித்த காண்டம்.

## அங்கதன்றூதுப் படலம்.

### வசனம்.

ஸ்ரீ ரகுராமன் எழுபது வெள்ளங் குரங்குச் சேனையோடு சேதுபந்தனம் செய்து இலங்கைமா நகரில்வந்து ராவணனுடைய வடக்குக் கோபுர வாயிலில் நின்றுகொண்டு விபூஷணன், சுக்கிரீவன், லெட்சுமணன் இவர்களுடன் ஆலோசித்து ராவணனிடம் அங்கதனைத் தூதனுப்பலும், அங்கதன் ராவணனிடம் போய்வந்து பதிலுரைத்தலும்.

### அம்மானை.

வள்ளலங்கு சென்று வடதிசையின் வாயில்நின்று
வெள்ள மெழுபத்துக் கணித்தபெருஞ் சேனையுடன்
கள்ளன் தனைவரவு கருதியே நின்றுகொண்டு
உள்ளமதி லொன்றை யுணர்ந்தேனே வீடணனே
தூதுதனை யனுப்பித் துரிதமுடனே சென்று
மாதுதனை விட்டுவிட்டு மாநகரை யாளுமென்று
சொல்லவவன் மறுத்தால் தோன்றும்படி நாம்சென்று
அல்லல் புரிசமர் செய்தடங்கலையும் மாளவைப்போம்
நீதியற முநிலையுமது வெனமே
கோதிலா நீதிபதி கூறலுற்று னம்மானாய்
அரக்கர் கோனுமதனை யாமென்று சம்மதித்தான்
குரக்கின் தலைவனுமே கோலரசற் குற்றதென்றான்
இரக்கமது வெப்பொழுது மிழுக்கே தருமென்று
மருப்புரிந்த தாருடைய மாற்கினையோன் சொல்லினனே
இன்றே சமர் செய்திடர் புரியுந்தானவனை
வென்று வெற்றிசூடவும் நாம்வேண்டுமே யல்லாது
நீதிகடந்து நெறிதவறி நிற்போனை
பாதிமதி யணிந்த பரமன் பெருந்தவச்சை
நிட்சய மென்றெண்ணி நிலைதவறி நிற்போனைக்
கட்செவி போலாட்டக் கடமையுள்ளோம் நாமென்றும்
தேசிதனையுஞ் சிறைதனிலே வைத்து விட்டான்

மாசிலாத் தேவரையும் வாட்டி வதைபுரிந்தான்
பூவுலகின் மானிடரைப் புடைத்தே வதைபுரிந்தான்
பாவமென்றும் புண்ணியமென்றும் பாராமலே நடந்தான்
பொற்றாமரை மார்பா புண்டரீகக் கண்ணனே
கற்றோரிதயமதிற் களித்தருளும் கற்பகமே
நீலமலை கடல் கார் நெய்த்த காயா மலரின்
கோலமுடன் வாளாழி கோதண்டஞ் சங்குதடி
ஏந்துங்கரமு மெழில் மாமணித் துளசி
சாந்துபொலியுந் தயங்குந் தடமார்பும்
குண்டலக் காதும் குவடொத்த திண்புயமும்
தொண்டர்க் கருள்சுரக்குந் தூயோனே யின்னமுங்கேள்
மாதுதுயரால் மயங்கி யழும்போ தெதிர்த்த
தாதைதனை வதைத்தான் தருமமதைச் சிதைத்தான்
துடியிடை யாளைவிட்டுத் தொழுதுசுகித் திரென்றால்
கடிகொளி லங்கைநகற் காவலனுங் கேட்பானோ
கோதிலா வீடணற்குக் கொற்றவனே நீமகுடம்
தீதில்லாமற் புனைவேன் செயமுடனே யென்றுரைத்த
வார்த்தை பழுதாகும் மருகுவந்து சேர்ந்துவிடும்
பார்த்து வறதனைப் பழுதாகு மென்றெண்ணில்ச்
சொல்லப் பயன்படுவோர் சான்றோர் கரும்பதுபோல்
கொல்லப் பயன்படுங்கீழ் வென்றபெரி யோருரையை
மரந்துமே நீமொழிந்தால் மாயவிலங்கை நகற்கு
இறந்துநீ போதவெளி தாகுமென் றுரைத்தான
இப்பிகரும் பெள் ளெளிதிற் பலனீயா
செப்பியே விட்டாலுந் தேரான் விதிவலியால்
சீதைதனை விட்டுன் திருவடியையே தொழுதால்ப்
பாதகனை வெல்லாமற் பட்சமுடன்காத்திடுவாய்
என்று சொன்னபோதே யிளையோன்றனை நோக்கி
குன்றொத்த தோளுடைய கொற்றவனு மேதுரைப்பான்
ஆனாலு மென்முடிவு மப்படியே யென்றாலும்
தேனின் மொழியுடைய தெளிந்தோ ருரைத்தபடி
புயத்தால் வலியாற் பொரும்பலமு முள்ளோமென்றால்
சயத்தா லறன்முறையே தான்நடப்ப தேயென்றான்
மாருதியு மின்னம் மருமுறையுமே சென்றால்
ஆருமுதவி யில்லையன்றி யிவடம் வர
என்றுமே நம்மை யிகழ்வானே பாதகனும்

நன்றுசொல்லி யங்கதனை நாம்தூ தனுப்பிவைத்தால்ச்
சத்துருக்கள் கூடித் தானே சமர்விளைத்தால்
ஒத்துமேபோர் செய்துடன் மீள வல்லவன்தான்
என்றென்று சொல்லி யெழிலுயர்ந் தவங்கதனை
நன்றென்று சொல்லி நடவென்றார் தூதக
அப்போது வங்கதனு மனுமன்றனைநிகர்த்தோம்
எப்போதுமென்று யிருந்தான் காணம் மானாய்
என்னவ வனுக் கெடுத்துமே நீயுரைத்தல்
பொன்னைவிட்டு வுன்சிரசைப் போற்றி வளர்த்திடுநீ
இல்லையே யானு லெழில்சேர் களம்புகுந்து
கல்நிகற்த தோளாய் கதிர்மகுடந்தான் புனைந்த
தலைகள் பத்துங்கொய்யச் சரமொன் றிருக்குதென்று
சிலைபயின்ற தோளானே செப்பிடென வுரைத்தான்
பாரை வணங்கிப் பரந்தவானத் தெழும்பி
வீரன்சிலையிற் கோத்த வம்பாய் விரைந்தனனே
மாருதிக்கு வொப்பாய் மணிவண்ணன் யென்னையென்றால்
யாரெனககு வொப்பாவா ரென்று சென்று னம்மானாய்
வெயில்கடவாக் காவல் மேருவினும் மேல்நீண்ட
எயில்கடந்தி லங்கை யிறைவனிடம் போய்நின்றான்
அயில்கடந்து நோக்குமரக்கர் தமைக் கடக்கத்
துயில்கடந் தையோத்திவந்தான் சொற்கடவாத் தூதனுமே
ஆகாயவிண்மணியு மதைக்கடக்க மாட்டாத
ஆகாய கெங்கையிற் றோய்ந்தாடி வருங்கொடியும்
கொந்தியாக வெழில் சிறந்த மண்டபமும்
சூரியனின்னொளியைச் சூழ்ந்தே மறைத் திலங்கும்
சீரறிய சிம்மா சனந்தனிலே ராவணனும
பாவையர் பல்லாண்டிசைப்பப் பலவாத்தியம் முழங்க
சேவைசெய்து ராட்சதர்கள் சேவடியைப் போற்றிநிற்க
அப்போது ராவணனு மரியணையின் மீதினிலே
எப்போதும் போல இருக்கின்ற நேரமதில்
அனும னெனவஞ்சி யழுதுநிற்குந் தானவர்கள்
மொனுமொனென றுவணன்பால் மொழிகின்ற வார்த்தைகளைக்
கேட்டுமே ராவணனுங் கேடிலுயர் சேனையுடன்
கூட்டங்கொண்டெயெழும் புங்கோல மதைக்கண்டானே
கல்மாங்க ளுண்டு கடலேழுந் தானுமுண்டு
வில்லென்றால் ராமனுட வில்லையே யல்லாது

கொல்ல யிவனையும்மே கூடா தெவராலும்
என்றுமேசொல்லி யெழில் சேர் லங்கைதனில்
குன்றுபோல் நின்றான் குலராமன் தூதுவனும்
அணியைப் பறித்த வணங்கின்மேல் வைத்தநகைப்
பிணியைப் பறித்துப்பிளந்து கொல்லவல்லவனர்
கார்வண்ணன் வந்துகணை தொடுத்து வென்றால்த்தான்
சீர்நிறைந்த பூவுலகுந் தேவருட மாநகரும்
மற்றுமோ ரேழுலகும் வாழும்படி யாகுமென்று
கற்றிணைக்குந் தோளான் களித்துநின்று னம்மானை
அங்கதனும நின்று வருளிலா ராவணன்முன்
புங்கமுடன்நின்று புரிந்தவர லாறுரைக்க
நின்றவனை ராவணனும் நெருப்பெழவே தான்பார்த்து
கொன்றிவர்கள் தின்பதன்முன் கூறுனது பேருரை
சொல்லிடுநீ யென்றான் துடுக்குடைய ராவணனும்
மல்லென்றால் தோள்துடிக்கும் வாலியுட சேயும்
கொல்லென்று கொக்கரித்துக் கூவிநின்று னம்மானை
பூதமுதல் பூவுலகும் பொன்னகற்கு மின்னகற்கும்
வேதமுலா யெதுக்கும் மிக்கபரம் பொருளாம்
அன்னவன் சொல்வார்த்தை வரிவிக்க வந்தேன்யான்
என்னவே சொல்லியியம்பி நின்று னங்கதனும்
அரனுமே யல்லயரி விதியுந் தானுமல்ல
குரங்கெலாங் கூட்டிக் குட்டமதைச் சேதுகட்டி
இரங்குபவன் போலயென் னிடத்திலுன்னை விட்ட
நரனோ யுலகினுக்கு நாயகம்மோ வென்றுநக்கான்
கங்கைபிறை சூடுங் கண்ணுதலும் வன்கரத்தில்
சங்கைத் தரித்தவருஞ் சாறூர்க ளின்னகரில்
அங்கவரை யன்றி மனிதனுக்காய் வந்துநின்று
இங்கிதனைச் சொன்ன தூதன்நீ யாவனென்றான்
இந்திரன்சேய் முன்னொருகா லிராவணன் யென்பவனை
சுந்தரத் தோளோடும் வாலிலே தொங்கவிட்டு
அட்ட கிரிதோரு மாட்டினவன் வன்சேய்ம்
வாட்டமிலாத் தேவருக்கு மாவமிர்த மேகடைய
மந்தரத்தை மத்தாக வாசுகியை நாணாகச்
சந்திரனைத் தூணாகத் தான்கடைந்தோன் மைந்தனென்றான்
உந்தையென் றுணேவனப்பா வோங்கறமுஞ் சான்றுமுண்டால்
நிந்தனையும் வேறுமுண்டோ நீயவற்குத் தூதனென்றால்

தந்தே னினதுடைய தரணி முழுவதையும்
வந்தனையே யெந்தனிடம் மைந்தாயென வுரைத்தான்
தாதையையுங் கொன்ருன் தலைசுமந்து பின்தொடர்ந்தாய்
பேதையனுய் வாழ்ந்தாய் பெரும்பிழையும் நீபுரிந்தாய்
பொற்கொடியாள் சீதையையும் புயவலியால் யான்பெற்றேன்
நற்றவத் தாலுந்தனையும் நான்சுதனுய்த் தானடைந்தேன்
ஏதெனக்கு யிவ்வுலகி லிச்சையும்மேல் வேறுமுண்டோ
வாதமெனக் கூறி வந்தாயே யென்னிடத்தில்
அன்னரார்யின்ருே நாளை வழிவதற்கோ ரையமில்லை
உன்னரசைத் தந்திடுவே னுளதியா லூழிமட்டும்
சிம்மா சனந்தனிலே சீர்தேவர் கொண்டாட
பெம்மானு நீயிருக்கப் பெருமகுடம் தான்புனைவேன்
அங்கதனுங் கேட்டுயிரு யங்கையோ டங்கைதாக்கி
இங்கவன் தோளுமார்பு மிலங்கையுங் குலுக்கநக்கான்
இங்கிருந்த பேர்கட் கிருநீயென நினைந்து
நுங்கள்பால் நின்றுயெம்பால் போந்தன னும்பியென்ருன்
வாயாற் றுதிபுரிந்தும் வன்மனத்தா லேபுகழ்ந்தும்
நீயாய்ப் புகன்றிடுஞ்சொல் நிட்சயமாய்ப் பார்ப்பளவில்
நாய்கொடுக்கச்சீயம் நன்மகுடம் பெற்றதொக்கும்
பேயனே யென் முன் பிதற்ருதே யென்றுரைத்தான்
அப்போ தரக்கன் வழலாய்க் கொதித்தெழுந்து
துப்புடனே வாலியையுந் துலைத்தா னொருகணையால்
அவனுக் குத்தூதென்ப தாச்சரியமாயிருக்கு
சிவன்வரம் பெற்றே னெனக்குச் சேதிசொல்ல வந்தவனே?
வந்தவிவரம் வழுத்திடுவாய் யென்றுரைத்தான்
கந்தரத்தோ ளொத்தானுங் கழருவா னப்போது
கூவியென்னை யழைத்துக் கொற்றவனே நீசென்று
பாவிதனை யெய்திப் பகர்வாய் யிதனையும் நீ
தேவிதனை விட்டுன் சிரம்பெருகென்றே சொல்லு
ஆவிதனையும் விட வடைவாய் யமற்களமே
இவ்விரண்டி லொன்றை யியம்பென்ரு ரெங்கோமான்
எவ்விதத்தினுலும் நீ யென்தாயை விட்டாக்கால்
வாழலாம் மண்மீதில் மதியிலாய் யென்றுரைத்து
சூழ்புவியாழ் வேந்தே சொல்வேனுனக்கு மிப்போ
பருந்துகளும் நரியும் பாட்டியையும் மாமனையும்
விருந்தாக வுண்ணவும்நீ விழித்திருந்தா யின்னுளும்

தங்கையை மூக்கறுத்தும் தனமிரண்டையு மறுத்தும்
பொங்கிவரும் நாளிலெலாம் போருக் கெழாதவன்நீ
இப்ப வரவுனக்கு வென்ன திடமிருக்கு
துப்பவுறு வுன்னுடைய சொல்லென்று வென்றுரைத்தான்
கிளை படைஞரோடுங் கேடிலுயர் பின்னோனும்
யிளையவனும் பிரிய யேகிமாயஞ் செய்த
மாரீசனையும் வதைபுரிந்த நாளினிலும்
வாராத நீயா வரவுமிப்ப ஞாயமுண்டு
ஏந்திழையைக் கண்ணுற் றெதிர்ந்தவர்கள் தம்மையெற்றிச்
சாந்தாய்ப் புதல்வனையுந் தரைமீதிலே தேய்த்தும்
அழலுக் கிரையாக வன்னகரை நீறு செய்தும்
விழைந்தே யனுமான் விரிகடலைத் தாவியும்மே
வந்தபொழுதும் மறைவா யிருந்தவன் நீ
எந்தைமுன் நிற்கவுனக் கென்ன திடமிருக்கு
உன்குலத்து வொற்றனுக்கு வுயிர்கொடுத்து மீளவிட்ட
மன்குலத்து ராமன் மதியையும் நீயோருமல்
வருணன் வணங்கி வழிவிடவும் பார்த்திருந்தாய்
அருணன் போலுந் தம்பியாளக் குடைகொடுத்தாய்
வேலை யடைத்தும் விழித்திருந்தா யின்னுளும்
காலமுனக்குக் கடைசியாய் விட்டது காண்
தேவர்களும் மூவர்களுந் தென்றிசையோ னைவரும்
யாவர்களுங் காணவணிந்த திரு மௌலி
பறிப்புண்டும் வாராதான் பணியவில்லை யினனமும்நீ
செறிப்பூண்டிருக்குந் தீங்குடையாய் நீயு மிப்போ
ஏந்திழையை விட்டு யெங்கோன் றிருவடியைச்
சேர்ந்திருந்து வாழாமற் செய்யுந் தொழிலிதென்ன
மாண்டுநீ போக மனமுனக்கு வுண்டானல்
தாண்டிவா யென்பின் சமற்கென்று னம்மானும்
வருண னுலகும் வளரக்கினி யுலகும்
பாருலகும் விண்ணுலகும் பாய்ந்தே சமர்புரிந்து
வெற்றியுடன் வாழ்ந்திருந்தாய் மேலிச்சமர் புரிந்து
இற்றைச்சமர் புரிய யியலாமலே யொளித்தாய்
ஆலமுண்டோன் வரத்தை யழிக்கவே யிப்பொழுது
ஞாலமுண்டோன் வந்துவிட்டார் நாசப்படுத்த வுன்னை
உன்னூரிலே பட்ன்வென்று னுனக்கும் பழியாச்சு
என்றங்கத னுறைக்க வெதிர்நின்ற ராவணனும்

கோபமது மென்மேலும் கொண்டுபெரு மூச்செறிந்து
பாபமது பாருமல்ப் பணித்தசுரர் நால்வர்களை
எவினா னன்னவரை யெற்றென்று வப்போது
தாவினா னன்னவருந் தந்தலைபோய்க் கீழ்விழுந்தார்
கூவினா னங்கதனுங் கோபுரத்தின் முன்னின்று
எமமது சார வெளியவர்கள் யாவருக்கும்
தூமமது போலிருக்கு வீரன சுடுசரங் காண்
வேமீன் போலவுமே வீழ்வ ததன்முனமே
போமின் போமினென்று போனா னாகாயமதாய்
அந்தரத்திற் பாய்ந்து வருள்சேரி ராமனடி
வந்து விண்ணின் மாமணிபோல் மலரடியைப் போற்றிநின்றான்
உற்றபோதவனி னுள்ளக் கருத்தை யெல்லாம்
கொற்றவனே கூறென்னக் கூறினா னம்மானாய்
முற்றவே வோதிடினும் மூர்க்கன் முடித் தலைகள்
அற்றபோதன்றி யவனாசையறா னென்றுரைத்தான்.

---

முற்றுப் பெற்றது.

1028917

## — மங்களம் —

இந்தக் கதை படித்தோ ரெழுதினோர் கேட்டோரும்
சந்ததமும் ராமன் தன்னடியி னீழலுற்று
இந்திர போகமுடன் யெல்லோர்க்கு மேலவராய்
வந்துமே பூவுலகில் மருபத்தில் விழாமல்
புண்டரீகக் கண்ணனுட பொற்பாதந்தா னடைவார்
அண்டருட நாயகனி னருட்பாதம்தான் வாழி
திண்டிரல் சேர்பிளையோன் செய்யபதம் வாழி
மஞ்சென நீண்டகோதை மாசீதை கழல்வாழி
அஞ்சனைதேவி யருள் புந்திரன் வாழி
பரதன் பதம்வாழி பண்புடைய சத்துருக்கன்
வரதன் கழல்வாழி மன்பெரும் தேவியரில்
குரோதமுள்ள கைகேசி கூனி யிருவருடன்
மற்றிரண்டு வன்னையரின் மலர்ப்பாதம் தான்வாழி
கற்றறிந்த வாணர் கழல்வாழி வாழியவே
இன்னூல்தனைத் திருத்தி யின்பமுட னளித்த
மன்னுலகி லடியார் மனவிருளை நீக்கிவரும்
சங்கேந்தி வாழுந்திரு வள்ளுவ ரில்லமுறும்
பங்கமிலாத குக **சதாசிவனார்** பண்புடைய
பொங்கு புகழ்ப்பாதம் பூவுலகில் வாழியவே.

**கம்ப நாட்டார் திருவடி வாழ்க !**



அன்புநிலையம் (மின்) அச்சகம், பட்டுக்கோட்டை.